ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்
மலர் 47] விபவ ஆண்டு புரட்டாசித்திங்கள் 10-10-88 [இதழ் 11

தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்



26½ ஆண்டுக்காலம் தருமையில் அருட்செங்கோல் ஓச்சி
10 - 11 - 1971 இல் காசியில் ஸ்ரீ விசுவேசர் திருவடி நீழலில் இரண்டறக்கல
கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பதினேழாவது ஆண்டு குருபூஜை விழா

1—11—1988 செவ்வாய்க்கிழமை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஓரின்ப மில்லா
துறுமலங்கள் போக்கியிடும்
பேரின்ப நின்குணமென்
பேதாய்கேள் — பேரின்பம்
நின்குணம்போல் தோன்றுமது
நீயாகை யான்இருப்பு
தன்குணமோ தீயியல்பு தான்.

— முத்திநிச்சயம் 13

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10–10–88 | இதழ் 11

உட்பொருள்

எண் பக்கம்

1 ஸ்ரீ கமலைஞானப்பிரகாசர், ஸ்ரீ கயிலைக் குருமணி, குருபூஜை விழா ... 561
2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 566
3 மதிப்புரை ... 572
4 சிறுத்தொண்டர் ... 573
5 திருச்சிற்றம்பலத்தில் கிராமவாசிகள் சார்பாக படித்தளிக்கப்பெற்ற வரவேற்பு வணக்க மடல் 577
6 அபிராமி அந்தாதி ... 579
7 பார்வையாளர் குறிப்பு நகல் ... 582
8 மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... 583
9 அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம் ... 587
10 போதமும் சித்தியும் ... 592
11 அவனிகந்தர்வ ஈசுவரகிரகம் ... 597
12 செய்திகள் ... 601
13 எதிர்காலம் ... 605
14 இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்–8. ... 609

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 11

தருமை ஆதீனத் திங்கள் இதழ்
விபவ புரட்டாசி 10—10—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர், ஸ்ரீ கயிலைக் குருமணி, குருபூஜை விழா

அருளாளர் இருவர் :

தருமபுர ஆதினக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர்தம் ஞானாசிரியர் ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர். அவரது குருபூஜைப் பெருவிழா நிகழும் விபவ ஆண்டு, ஐப்பசித்திங்கள் 14 ஆம் நாள் தேய்பிறை சஷ்டிநாளாகிய 30—10—88 ஞாயிற்றுக் கிழமை அன்று வருகிறது. இதேபோல் தருமை ஆதீனம் 25 ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்து, இன்றைக்கு 17 ஆண்டு களுக்கு முன் ஸ்ரீ காசியம்பதியில் பரிபூரணம் அடைந்த கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா அடுத்த இருநாட்களில், ஐப்பசித்திங்கள் 16 ஆம் நாள் காளாஷ்டமி கூடிய 1—11—88 செவ்வாய்க்கிழமை அன்று வருகிறது. இவ்விரு குருமூர்த்திகளின் குருபூஜைப் பெருவிழாக்களையும் முறையே திருவாரூரிலும், தருமையிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாட, தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண்டுள் ளார்கள். 'தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே' என்ற திருமூலர்

குறிப்பின் வழி, தருமை ஆதீன அருள் வரலாற்றில் ஆதி குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரின் ஞானாசிரியராகிய கமலை ஞானப்பிரகாசர் குருபூஜையையும், இன்று எழுந்தருளி யிருக்கும் 26 ஆவது குருமகாசந்நிதானத்தின் ஞானாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜையையும் அடுத்தடுத்துக் கொண்டாடும் அரிய வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது.

குருமணியின் திருவுள்ளம் :

தமிழ் மக்களாகிய நாம், நமது இனம், மொழி, இலக்கியம் மற்றும் சமய வரலாறுகளைத் துல்லியமாக ஆராய்ந்து வெளிப் படுத்தவில்லை. இம்முயற்சியில் முதல் ஆய்வு நிகழ்த்தியோர் மிகச் சிலரே; நுனிப்புல் மேயும் நிலை மாறி, ஆழமான புலமையாளர்கள் இவற்றை அரிதின் முயன்று, தேடி வெளிப்படுத்த முன் வர வேண்டும் என்பன தருமைக் குருமணியின் திருவுள்ளம். தருமை ஆதீன குருபரம்பரை வரலாற்றில் உமாபதி சிவாசாரியாருக்கும், ஸ்ரீகுருஞானசம்பந்தருக்கும் இடைப்பட்ட காலத்தில்வாழ்ந்திருந்த அருளாளர்களின் வரலாறுகளை முறையாக ஆராய்ந்து வெளிப் படுத்தும் முயற்சியில் ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசரின் அருள்வரலாறு ஒருவாறு கண்டறியப்பட்டு, வரலாற்றுச் சுருக்கம் 10—11—87இல் ஞானசம்பந்தம் இதழில் தலையங்கம் வாயிலாக வெளிப்படுத்தப் பட்டது. திருவாரூரில், ஓடம் போக்கி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள ஞானப்பிரகாசர் கொல்லையும், அங்குள்ள பூஜை மண்டபமும் கண்டறியப்பட்டன. தருமைக் குருமணி அவர்கள் எழுந்தருளி, குருபூஜை விழாவைக் கடந்த ஆண்டு, பல்வேறு அங்கங்களுடன் சிறப்பாக நடத்தியருளினார்கள்.

புதிய ஆய்வுகள் :

திருக்கயிலாய பரம்பரையில் அருள் நமச்சிவாயரை அடுத்து வந்த அருளாளர்களைப் பற்றிய வரலாற்று ஆய்வுகள் முனைப்பாக மேற்கொள்ளப் பெற்றுவருகின்றன. அருள் நமச்சிவாயரை அடுத்து வந்த காழிகங்கை மெய்கண்டார் அருள் வரலாறோ, அவர்கள் சமாதி கூடிய இடமோ இது நாள் வரை புலப்பட்டுத் தோன்ற வில்லை. திருவண்ணாமலைக்கோயில் கல்வெட்டு ஒன்றில் காணப்படும் மெய்கண்டீச்சரம் இவர்கள் வரலாற்றோடு பொருந்தி வரவில்லை. அக்கல்வெட்டின் காலம் இரண்டாம் இராசராச சோழன் காலமாகிய கி. பி. 1146 - 1173 ஆகும். காழிகங்கை மெய் கண்டார் காலம் கி. பி. 1330 - 1335. அபிதான சிந்தாமணி காழி கங்கை மெய்கண்டார் கங்கைகொண்ட சோழபுரத்தில் வாழ்ந்தவர் என்று குறிக்கிறது. சீகாழித் தலபுராண (1937) அடிக்குறிப்பொன்று இவர்கள் வாழ்ந்திருந்த வீடு சீகாழி

காருடைப்பிள்ளை வீதியில் (இப்போது தேரோடும் கீழைவீதி வடபகுதி) அம்பிகை விலாச வித்தியா சாலையாக விளங்குவதாகக் குறிக்கிறது.

புதிய ஒளிக்கீற்றுகள் :

அடுத்து வந்த சீகாழி சிற்றம்பலநாடிகள் வரலாறு ஒருவாறு விளக்கம்பெற்றுள்ளது. இவர்களது தருமூர்த்தம் மயிலாடுதுறையை அடுத்த சித்தர்க்காட்டில் சிவாலயமாகத் திகழ்கிறது. இதுவே கயிலாய பரம்பரையில் வரும் சிற்றம்பலநாடிகள் என்பதைத் தெளிவாகக் கண்டறிந்து வழிபாடுகள் அண்மையில் குருபூஜை விழா 8—5—1988 அன்று சிறப்பாக நிகழ்த்தப் பெற்றன. இவர்கள் வாழ்ந்திருந்த இல்லம் சீர்காழி வடக்கு ரத வீதியில் திரு. கி. சிதம்பரநாத முதலியார் இல்லத்தின் கீழ்பால் இன்று வித்துவான் திரு. சோ. அருணாசல தேசிகர் இல்லமாகத் திகழ்ந்து வருவதாகச் சீகாழித் தலபுராண அடிக்குறிப்பு அறிவிக்கிறது; இன்று சித்தர்க்காட்டில் சம்பந்தர் கோயில் என்று வழங்கப்பெறும் சிவாலயம் சீகாழி சிற்றம்பலநாடிகளின் 64 மாணாக்கர்களுள் ஒருவராகிய, காழி பழுதைகட்டி சம்பந்த முனிவரின் குருமூர்த்த ஆலயமாதல் கூடும் எனத் தெரிய வருகிறது. இது ஆய்வுக்குரியது; அடுத்து வந்த சிவபுரம் ஞானப்பிரகாசர் திருத்துருத்தியில் (குத்தாலம்) எழுந்தருளியிருந்தார்கள் என்றும், அவர் மாணவர் சிவபுரம் தத்துவப்பிரகாசர் விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயர் காலத்தவர் என்றும் அபிதான சிந்தாமணியில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்விருவர் குருமூர்த்தங்கள் இருக்கும் இடங்கள் பற்றி ஏதும் அறியக்கூடவில்லை.

கமலை ஞானப்பிரகாசர் காலம் :

மேற்கொள்ளப் பெற்ற ஆய்வுகளால் கமலை ஞானப்பிரகாசர் அருள் வரலாற்றில் மேலும் சில உண்மைகள் வெளிப்பட்டுள்ளன. கமலை ஞானப்பிரகாசரின் திருவுருவச் சிலை ஒன்று திருவாரூர் அருள்மிகு. தியாகராஜப்பெருமான் திருக்கோயில் தெற்குக் கோபுரத்தில் புடைப்புச் சிற்பமாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. கமலை ஞானப்பிரகாசரின் காலத்தைத் துல்லியமாக மதிப்பிடக் கல்வெட்டு ஒன்றும், அவர்களே இயற்றிய திருமழுவாடித் தலபுராணப் பாடல் ஒன்றும் துணை செய்கின்றன.

> "மகாராயர் பிருதுவிராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம் 1482 இன் மேல் செல்லாநின்ற இரவுத்திரி வருஷம் ஆனி (2) மீ 4-2 அனி(ய)ராமராசையர் குமாரர் கிருஷ்ணமராசையன் உத்தாரப்படிக்கு அவ(ஸ)ரம் விருபாக்ஷ நாயக்கர் சிக்கல் வடகுடி ஓடாச்சேரி முதலான

தேவஸ்தானங்களுக்கு (3) திருவாரூர் ஞானப்பிரகாச பண்டாரத்தைப் பரதேசி முத்திரையும் கணக்கு எழுத்து மடைத்துக்கொள்ளும் படியும்......"

என்று நடையிடும், தஞ்சைமாவட்டம் சிக்கல் அருள்மிகு. நவநீத சுவாமி திருக்கோயில் கல்வெட்டு, கமலை ஞானப்பிரகாசருக்கு வழங்கப்பெற்ற ஆசாரிய சிறப்புக்களை எடுத்துரைக்கிறது. இக் கல்வெட்டின் காலம் கமலை ஞானப்பிரகாசர் பேரருட்பெருமை யுடன் ஆசாரியராக வீற்றிருந்த காலம். இது கி. பி. 1556 ஆகும். தலபுராணமும் ஏறத்தாழ இதே காலத்தை விளக்குவதால் கமலை ஞானப்பிரகாசர் ஆசாரியராகவீற்றிருந்த காலம் கி. பி. 1525க்கும் 1560க்கும் இடைப்பட்ட காலம் என்பது தெரியவருகின்றது.

ஞானப்பிரகாச சிவன் :

கமலை ஞானப்பிரகாசரின் மாணவர் பலருள்ளும் ஒருவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். குருஞானசம்பந்தர் அருளிய குரு தோத்திரம் ஞானப்பிரகாசமாலை. இதனைப் பண்டாரக்கலித்துறை எனவும் வழங்குவர். இது 36 கட்டளைக்கலித்துறைப்பாக்களால் நடையிடுகிறது. இந்நூலில் குருஞானசம்பந்தர், தம் ஞானாசிரியர் கமலை ஞானப்பிரகாசரை, 'திருவார் கமலையுள் ஞானப் பிரகாசன் (1) 'சிற்பரநாதன் கமலையுள் ஞானப்பிரகாசசிவன்(3), 'முத்திக்கொடி ஆள்பவன்' (5) 'அன்பர் நினைத்த எல்லாம் தரும் நித்தன்' (6) 'எள்ளத்தனை அன்பு நேராகச் செய்பவர்க்கு இன்ப சுகவெள்ளத்து அழுத்திய ஞானப்பிரகாசன் (13) 'விதம்பர லோகன் கமலாலயத்துள் விமலன் இன்பச் சிதம்பரநாதன் கமல பொற்பாதன்' (24) 'செழுமதி மானும் மழுவும் மறைத்து வந்த தேசன் (28) எனப் பலவாய தொடர்களால் போற்றித் துதிக் கின்றார். இவ்வாறு திருக்கயிலாய பரம்பரையில் ஞானாசிரியராய், நூலாசிரியராய், பேரருளாளராய் வீற்றிருந்த கமலை ஞானப் பிரகாசரை நெஞ்சத்தில் நினைந்து வந்தித்து வழிபடுதல் சைவப் பேரன்பர்களின் கடனாகிறது.

குருமணிப் பார்வையில் கயிலைக் குருமணிகள் :

தருமை ஆதீன ஞானபீடத்தை 26½ ஆண்டுகள் அலங்கரித்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாற்றலை, ஆட்சிச் சிறப்பை - அனுபவ வெளிப்பாடுகளை விரிப்பின் பெருகும்! இன்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் பரிபூரணம் எய்திய பத்தாம் நாள் குருபூஜை மலருக்கு இன்றைய 26 ஆவது குருமூர்த்திகள் வழங்கியருளிய அருளாசியுரை எக்காலத்திற்கும் பொருந்தும் ஏற்றமிக்க மதிப்பீடாக அமைகிறது. இதனினும் சிறந்த அஞ்சலியாக வேறு எதுவும் இருக்க இயலாது!

"ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் உலகறிந்த புகழ் உடையவர்கள். புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி நன்னெறி காட்டுவிப்பதுடன், நவையறு காட்சியும் நல்கி அனைவரையும் அடிமை கொள்ளும் அருளாளராக விளங்கினார்கள். அரசியல் வாதிகள், திருமடத்துத் தலைவர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், உழைக்கும்தொழிலாளர்கள், பல்வேறு நாடுகளில் வாழும் வேற்றுச் சமயத்தவர்கள் ஆகிய அனைவர் உள்ளங்களிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தனியிடம் பெற்று விளங்கினார்கள் என்பது அனைவரும் அனுபவத்தில் உணர்ந்த விழுமிய உண்மை."

தருமைக் குருமணி அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தமக்கு அருள்பாலித்த கருணையை,

"கயிலைக்குருமணியவர்கள் ஞானபீடம் ஏறிய நாள் தொட்டுச் சரியாக 26½ ஆண்டுகளுக்குள், திருமுக மண்டலப் பொலிவாலும், திருமேனியின் தோற்றத்தாலும், நோக்காலும், வாக்காலும், உள்ளத்துணர்வாலும், எல்லாத்துறையிலும் உள்ளவர்களைக் கவர்ந்து, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க, ஞான அரசு புரிந்தார்கள். எல்லா வகையிலும் சமயப்பணி புரிந்த குருமணியவர்கள் எளியேமுக்குத் தமிழறிவு புகட்டித் தத்துவ வுணர்வூட்டித் திருவடி சூட்டி, அறுபகைதெறும் ஆற்றலைக் கூட்டி அருள்பாலித்துள்ளமைக்கு......"

"சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி
வல்லவந்தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி போற்றி"

என வணங்குவதும் வாழ்த்துவதும் அன்றி வேறு கைம்மாறு காண்கிலேம். தருமைக் குருமணி அவர்கள் அருள் உரையின்வழி நின்று நாமும் வாழ்த்தி வ்ழிபட்டு உய்வோம்!

வருக! வருக!

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி ஆகிய இருபெருங்குருமணிகளின் குருபூஜை விழாக்களில் பங்கேற்று, குருவருள் பெற்று உய்ய ஞானசம்பந்தம் அன்பான அழைப்பு விடுக்கிறது. அனைவரும் வருக! குருவருள் போற்றுக! அருள் நலம் பெறுக.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

— திருமூலர்.

உ
குருபாதம்
திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

சீகாழி சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளியில்
நடைபெற்ற முப்பெரும் விழாவில்
வழங்கியருளிய

ஆசியுரை

5—9—1988

"வாருறு வனமுலை மங்கை பங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடம்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயல் சிரபுரமே."

— திருஞானசம்பந்தர்.

நன்றி அறிதல் :

திருத்தோணியப்பர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளதனால் ஊழிக்காலத்திலும் அழியாத சிறப்பு இந்தச் சீர்காழியம்பதிக்குண்டு. இத்தலத்தில் 92 ஆண்டுகளுக்கு முன்பு, சமுதாய நலன் கருதித் துவக்கப் பெற்றது இப்பள்ளியாகும். இப்பள்ளியில், இன்று முப்பெரும் விழாக்கள் நடைபெறுகின்றன. ஒன்று, ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பாராட்டும் விழா; இரண்டு, நிறுவுநர் விழா; மூன்று, குமரகுருபர முனிவர் 300 ஆவது ஆண்டு நிறைவு நினைவு விழா. இம்மூன்று விழாக்களுமே ஒருவகையில் பார்த்தால் நன்றி அறியும் விழாக்களாகவே விளங்குகின்றன. பயன் பெற்றவர்கள் பெறத் துணைநின்றவர்களை நினைந்து போற்ற வேண்டுவது கடமையாகும். இதனையே நன்றி அறிதல் என்பார் திருவள்ளுவர். இன்று பலரும் நன்றி கூறுதல் என்றும் நன்றி பாராட்டுதல் என்றும் கூறுகின்றனர். அவை சரியல்ல. நன்றியினை, அறிதலும் உணர்தலுமே முக்கியமாகும். அதனால் தான் திருவள்ளுவர், "செய்ந்நன்றி அறிதல்" என்று அதிகாரத் தலைப்பினை அமைத்தார். அதில் ஒரு குறள் ஈண்டுச் சிந்தனைக்குரியது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது குறள். எந்த நன்மையினைக் கொன்றார்க்கும் உய்வுண்டு; ஒருவன் செய்த நன்மையினைக் கொன்றவர்க்கு என்றுமே உய்வு இல்லை என்பது வள்ளுவர் கருத்து. நமக்கு நன்மை தருவன பல உள்ளன. உண்பது; உறங்குவது; விளையாடுவது போன்றன ஒருவருக்கு நன்மை தரும் காரியங்கள் ஆகும். ஆனால் இவற்றில் ஒன்றினை ஒருவர் மறந்து வாழ்ந்தாலும் உய்யலாம். நமக்குப் பிறிதொருவர் செய்த நன்மையினை மறந்து வாழ்ந்தால் என்றுமே உய்வில்லை என்றார். செய்த நன்றியினை மறத்தல் என்பது வேறு; அதனைக் கொல்லுதல் என்பது வேறு. மறத்தல் என்பது, உதவி செய்தவருக்குப் பதில் உதவி செய்யாது மறந்து வாழ்தல்; கொல்லுதல் என்பது, உதவி செய்தவருக்கே தீங்கு செய்தல். இதனை வள்ளுவர் கடுமையாகச் சாடுகிறார். இதனை உணர்ந்து நன்றியினைக் கொல்லாமலும் நன்றியை மறவாமலும் நன்மையை உணர்ந்து இங்கு முப்பெரும் விழாக்கள் எடுத்துள்ளமை பாராட்டத் தக்கது. இனி, இம்மூன்று விழாக்கள் குறித்தும் சில சிந்தனைகளை மேற்கொள்ளலாம்.

பாராட்டு விழா :

முதலில் ஆசிரியர்களைப் பாராட்டும் விழா. ஆசிரியர்கள் என்போர் மிகவும் போற்றப்பட்ட வேண்டியவர்கள். "எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்பது ஆன்றோர்வாக்கு. தம்மிடம் ஒப்படைக்கப் பெறும் இளம்பிள்ளைகளுக்கு எழுத்து அறிவித்து, அதன்வழி நல்ல நெறிகளைக் கற்றுக் கொடுத்து, அவர்களை எதிர் காலத்தில் சிறந்த குடிமக்களாக வாழ வழிகாட்டும் பொறுப்பு உடையோர் ஆசிரியர்கள். இதனை உணர்ந்து அவர்கள் நடந்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். அத்தகைய நல்லாசிரியர்களைப் போற்றி நன்றி பாராட்டுதல் மாணக்கர்களின் தலையாய கடமை யாகும். அதனை இப்பள்ளி நிர்வாகம் ஆண்டுதோறும் சிறப்பாகக் கடைப்பிடிப்பது பாராட்டத்தக்கதாகும்.

தமிழ் போதனையின் சிறப்பு :

பிறநாட்டிற்கும் நம்நாட்டிற்கும் கல்வி போதிப்பதில் வேறுபாடு உள்ளது. ஆங்கில மொழியில் ஓர் எழுத்தைக் கற்றுத் தரவேண்டுமெனில், அது குறிக்கும் பொருள் ஒன்றைச் சுட்டி அதன் மூலம் கற்றுத்தருகின்றனர். எடுத்துக்காட்டாக, "A For Apple"; "B For Biscuit" என்று கூறுகின்றனர். இதனால் அவர்கள்

'A' என்னும் எழுத்தையும் அதன் மூலம் ஆப்பிள் பழத்தையும், ரொட்டித் துண்டையும் அறிவிக்கின்றனர். இதனால் பொருளறிவு மட்டுமே பெறுகின்றனர். ஆனால் தமிழ்மொழியில் அகரமாகிய எழுத்தை உணர்த்த வரும் பொழுது "அறம்செய விரும்பு" என்கூறினர். இதனால் அகரம்என்றஎழுத்தும், அறம் என்ற பண்பும் சுட்டப்பெற்று, அதன் மூலம் அறத்தைச் செய்ய விரும்புக என்னும் பண்பு நெறியினையும் கூடவே போதித்துள்ளனர். இங்ஙனமே ஒவ்வொரு எழுத்தையும் குறிக்கும் வகையில் ஔவையார் ஆத்தி சூடியைப் பாடியுள்ளார். ஆறுவது சினம்; இயல்வது கரவேல்; ஈவது விலக்கேல் எனத் தொடர்ந்து எழுத்துக்களை அறிவிக்கும் போதே இளம் பிள்ளைகளின் நெஞ்சில் நல்லபண்புகளை உணர்த்திய உயர்ந்த கல்வி முறை இந்த நாட்டிற்குரியது. எழுத்துக்களைக் கற்றுக் கொள்பவர்கள் இளம்பிள்ளைகள் ஆதலின் அவர்களைப் பார்த்து, நீங்கள் அறத்தைச் செய்யுங்கள் என்று போதிக்காமல் அறத்தைச் செய்ய விரும்புங்கள் என்று போதித்த முன்னோர்களின் சிந்தனை நோக்கத்தக்கது. பள்ளிச் சிறுவர்களின் நெஞ்சில் அறத்தைச் செய்யும் விருப்பத்தை ஏற்படுத்திவிட்டால் அவர்கள் எதிர்காலத்தில் வளர்ந்த பொழுது அறங்களை விருப்பத்தோடு செய்வார்கள் என்று முன்னோர்கள் கருதினர்.

எண்ணும் எழுத்தும் :

மேலும் வெளிநாட்டார் பொருள் வளர்ச்சியைக் கருதி அதற்கு உதவும் வகையில் பொருள் அறிவினைப் புகட்டத் தலைப்பட்டனர். அவ்வகையில், அவர்கள் அறிவியல், பொருளாதாரம், பூகோளம், அரசியல் எனப் பிரித்துப் பலவாருகப் போதிக்கின்றனர். ஆனால் நமது நாட்டில் போதனைக்குரிய பிரிவுகளை இரண்டு பெரும் பகுதி களில் அடக்கினர். 1. கணிதம்; 2. இலக்கியம். இவற்றையே "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்றும் "எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்றும் குறித்தனர். ஈண்டு எண் என்பது கணிதம்; எழுத்துஎன்பது இலக்கியம் ஆகும். கணிதத்தின் மூலமாக இம்மைக்கு வேண்டிய பொருளாதார அறிவுத்திறனையும் இலக்கியம் மூலமாக இம்மை மறுமைக்கு வேண்டிய தனிமனித ஆன்மீக வளர்ச்சிக்குரிய பண்பு நெறிகளையும் உணர்த்தினர். இத்தகைய சிறந்த கல்விமுறை இன்று, மாறி வெளிநாட்டார் கல்வி முறை போலப் பொருள் அறிவு மட்டும் புகட்டும் போக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் மாணவர்கள் மத்தியில் பொதுவான சரித்திர, பூகோள, அறிவியல் அறிவு, ஏற்பட்டுள்ளது எனினும் தனிமனிதப் பண்பாட்டு வளர்ச்சி குன்றிப் போய்விட்டது. அதனால் போட்டியும், பூசலும், பதட்டமும், நிம்மதி யற்ற வாழ்வும் நிறைந்து காணப்படுகின்றன. இதனை அறிஞர்

உலகம் சிந்தித்து மாணவர்கள் மத்தியில் நல்ல பண்பு நெறிகள் வளர்வதற்குரிய வகையில் பாடத்திட்டங்களை அமைத்து எதிர்காலத் தலைமுறை இன்பமாக வாழ வழி காணல்வேண்டும்.

படிப்பின் பயன் :

இளம் பிள்ளைகளுக்கு ஔவையார் ஆத்திசூடியின் மூலம் சிறந்த பண்பு நெறிகளைப் போதித்ததுபோல அவர்கள் வளர்ந்து சிறந்த குடிமக்களாக வாழத் தொடங்கும் பொழுது எங்ஙனம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்றும் ஒருபாடலில் கூறியுள்ளார். அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்கள் பற்றிய சிந்தனையினை அவர் அப்பாடலில் கூறுகின்றார். ''அறம் பொருள் இன்பம் வீடுஅடைதல் நூற்பயனே'' என நன்னூல், நூல்களைப்படித்தலின் பயன் இந்நான்குமே என்று கூறும். எது அறம், எது பொருள், எது இன்பம், எது வீடு என்னும் கேள்விகளுக்கு விடை கூறுவதுபோன்று ஔவையார் அப்பாடலில் விளக்கம் தந்துள்ளார். ஒருவருக்கு ஏதேனும் ஒருபொருளை ஈதலே அறம் என்றும், தீயவழியில் இல்லாமல் நல்லநெறியில் உழைத்து ஈட்டுவதே பொருள் என்றும், அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் எஞ்ஞான்றும் கருத்தொருமித்துக் கூடி வாழ்தலே இன்பம்என்றும், இவற்றிற்கெல்லாம் மேலாகஉள்ள பரம்பொருளை நினைந்து இம்மூன்றின் மேல் உள்ள பற்றினையும் விடுதலே வீடு என்றும் கூறியுள்ளார்.

> ''ஈதல்அறம்; தீவினைவிட்டு ஈட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
> காதல் இருவர் கருத்தொருமித்து — ஆதரவு
> பட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு''

இப்பாடலில் மூன்றாவதுவரியில்உள்ள'பரனை நினைந்து' என்னும் தொடரை இடைநிலைத்தீவகமாக மற்ற மூன்றுஇடத்திலும் கூட்டிப் பரனை நினைந்து ஈதலே அறன் என்றும் பரனை நினைந்து தீவினை விட்டு ஈட்டலே பொருள் என்றும் பரனை நினைந்து காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என்றும் பொருள் காணுதல் சிறப்புடையதாகும்.

இவ்வண்ணம் பலவாறாகச் சிந்தித்து இளைய தலைமுறையினரை நன்னெறியில் ஈடுபடுத்தி வளர்த்து வரும் ஆசிரியர்களைப் பாராட்டுவது முறையானதும் முக்கியமானதுமாகும்.

நிறுவுநர் விழா :

அடுத்து இப்பள்ளியின் நிறுவுநர் விழா. இப்பதியில், இப் பகுதியைச் சார்ந்து வாழ்கின்ற பிள்ளைகள் கல்வி நலத்தில் சிறந்து வளரவேண்டும் என்னும் பெருமனத்தோடு சபாநாயக முதலியார் 1896இல் இப்பள்ளியினைத் தொடங்கினர். அவர்தம் குடும்பத்தினர் அவரது நல்லெண்ணத்திற்கேற்ப அவர்களுக்குப் பின்னே இதனைக் கண்ணும் கருத்துமாகக் கட்டிக் காத்து வளர்த்து வருகின்றனர். இப்பள்ளி இன்று மேல்நிலைப்பள்ளியாக வளர்ந்து கட்டிடங்கள் பலவும் பெற்றுப் பொலிவோடு விளங்குகிறது. இதில் கல்விபயின்ற பலர் இன்று நாடெங்கிலும் பல துறைகளிலும் பணியாற்றிச் சிறந்து விளங்குகின்றனர். இங்ஙனம் ஆலமரம் போல் தழைத்துக் கல்வி நிழல் பரப்பி வரும் இந்நிறுவனத்தைத் தொடங்கியோரை நினைந்து போற்றுவதும், நன்றி பாராட்டுவதும் இன்றியமையாக் கடமையாகும்.

குமரகுருபரர் விழா :

நிறைவாகக் குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நிறைவு நினைவு விழா. குமரகுருபரர் ஐந்து வயது வரை ஊமையாயிருந்து செந்திலாண்டவன் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்று, 'கந்தர்கலிவெண்பா' என்னும் அரிய நூலை அருளியவர். மதுரையில் மீனாட்சியம்மையின் மேல் பிள்ளைத் தமிழ் பாடி அப்பெருமாட்டியின் திருக்கரங்களினால் முத்துமாலை அணிவிக்கப் பெற்றுப் பாராட்டுப் பெற்றவர். நம் தருமை ஆதீனத்தின் நான்காவது குருமூர்த்தி களிடம் உபதேசம் பெற்று, குருமூர்த்திகளின் ஆணைவழி, காசி சென்று திருவருளும் குருவருளும் கூட்டுவித்த நிலையில் ஸ்ரீ குமார சாமி மடத்தினை அங்கு நிறுவி,சைவம்பெருக்கிய சால்பாளர். அவர் பதினறு நூல்களைப் பாடியுள்ளார். அவர் இறையடி அடைந்து 300 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், அவரின் நினைவினைப் போற்றும் வண்ணம் 300 ஆவது ஆண்டு நிறைவு நினைவு விழா இவ்வாண்டு முழுவதும் நாடெங்கிலும் கொண்டாடப் பெற்று வருகிறது. அவ்வகையில் இப்பள்ளியிலும் வாழ்வியல் கருத்துக் கருவூலம்வழங்கிய அடிகளை நினைவுகூர்ந்து விழாக்கொண்டாடுவது நன்றியறிதலைப் புலப்படுத்தி மகிழ்விக்கிறது.

நீரும் நிலையாமையும் :

குமரகுருபரர் பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் கூறியுள்ள அரிய செய்திகள் பல உள்ளன. அவற்றில் ஒன்று, "இளமையும்

செல்வமும் உடம்பும் நிலையற்றன என்று கருதிப் பெருமானின் திருவருளைப் போற்றி உய்வீர்களாக'' என்பதாகும். இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையற்றன என்பதனை நாலடியார்போன்ற நூல்கள் தனித்தனியாகப் பல பாடல்களில் கூறியுள்ளன. ஆனால் குமரகுருபரர் இம்மூன்று நிலையாமையையும் ஒரே பாடலில் கூறியுள்ளார். மேலும் இம்மூன்று நிலையாமையினையும் ஒரே பொருளில் வைத்து அழகுறக் கூறியுள்ளமை எண்ணத்தக்கது. நீரில் உள்ள குமிழி போன்றது இளமை என்றும், அந்நீரில் சுருண்டு வருகின்ற அலைகள்போன்றது செல்வம் என்றும், அந்நீரில் எழுதியஎழுத்தைப் போன்றது யாக்கை என்றும் இயம்பியுள்ளார். இங்ஙனம் நீர் என்னும் ஒரேபொருளில் மூன்று நிலையாமையையும் வைத்து விளக்கியுள்ள அவர் திறம் போற்றத்தக்கது. இத்திறம்வேறுஎங்கும் காண இயலாத ஒன்று. நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவைப்போக்கி, நிலையான ஒன்றை-நிலையிது என்றுஉணரும் நல்லறிவை நமக்காக்குவது இவ்வினிய பாடல்.

" நீரில் குமிழி இளமை நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாதது எம்பிரான் மன்று "

என்னும் பாடலில் அக்கருத்துக்களைக் காண்க.

வாழ்த்து :

எழுத்தறிவிக்கும் ஆசிரியர்கள் நன்றியறிதலுக்குரியவர்கள். எழுத்தறிவிக்க இடம் முதலிய வசதிகளை வழங்கும் நிறுவுநரும், நிர்வாகிகளும் நன்றியறிதலுக்குரியவர்கள், கருத்துக் கருவூலம் வழங்கும் குமரகுருபரர் போன்ற ஞானிகளும் நன்றியறிதலுக் குரியவர்கள். எனவே இம்முத்திறத்தார்க்கும் நன்றிபாராட்டும் விழாவாக இம்முப்பெரும்விழா கொண்டாடப்பட்டிருப்பதுபாராட்டிற் குரியது. முப்பெரும் விழாவினைச் சிறப்பாக அமைத்துக் கொண்டாடி வரும் இப்பள்ளி நிர்வாகத்தினரும் ஆசிரியர்களும மாணவர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழவும் இளைய தலைமுறையினர் நன்னெறிநின்று நல்லவண்ணம் வாழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்படும் நிலையில் வளரவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வளர்க நல்லறிவு!

வாழ்க கல்வி நிலையம்!

மதிப்புரை

அபிராமி அந்தாதி ஆராய்ச்சி

[தருமை ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகவெளியீடு. ஆசிரியர் திருமதி. தேவகி முத்தையா, எம். ஏ., எம். ஃபில்., அடையார்வில்லா-கோட்டூர்புரம் - சென்னை - 600085. பக்கம் 160. விலை 10—00 கிடைக்குமிடம்:-செயலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், மயிலாடுதுறை 609001 தஞ்சாவூர் (மாவட்டம்)]

'அபிராமி அந்தாதி ஆராய்ச்சி' என்னும் இவ்வரிய நூல் திருக்கடவூரில் கோயில் கொண்டு அருள்பாலித்துவரும் அருள்மிகு. அபிராமி அம்மை மேல் அபிராமிபட்டர் பாடிய அபிராமி அந்தாதி என்ற பாராயண நூலைத் தற்கால அறிவியல் ஆராய்ச்சிநெறிநின்று பகுப்பாய்வுசெய்து எழுதப்பெற்றுள்ளது. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுரையுடன், தருமைஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகவெளியீடாக வெளிப்போந்துள்ளஇந்நூல், அபிராமி அம்மை திருவடிகளில் அளப்பரிய பக்திகொண்டு வாழ்ந்து வரும் சென்னை திருமதி. தேவகிமுத்தையா எம். ஏ., எம். ஃபில்., தம் எம். ஃபில்., ஆய்வுப்பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப் பெற்ற ஆய்வேட்டின் நூல் வடிவமாக வெளியிடப் பெற்றுள்ளது.

அபிராமி அந்தாதி ஆராய்ச்சி, அமைப்பும் சிறப்பும், சமயக் கூறுகள், இலக்கியக்கூறுகள், ஒப்பீடு என்னும் நான்கு பகுதிகளாகக் கொண்டிலங்குகின்றது. அபிராமிஅந்தாதி ஒரு சாக்தநூல் அன்று, சிவநெறியோடு சிறிதும் மாறுபடாத சிவசக்தித் தோத்திரமே என்பது நன்கு நிறுவப் பெற்றுள்ளது. 'ஆத்தாள்' என்ற சொல் ஆய்வு, 'மாயாமுனிவர்' என்பதை மார்க்கண்டேயர் எனப் பொருள்காணும் நுட்பம், ஒளி அனுபவம் என்ற புதிய குறியீட்டு விளக்கம், 'அபிராமி சமயம்' யாது என்பது பற்றிய மதிப்பீடு, இந் நூலின் அற்புதமான இலக்கிய அழகு முதலியன நூலாசிரியரின் ஆய்வில் நுட்பமுற விளக்கப் பெற்றுள்ளன.

தருமைக் குருமணி அவர்கள் தம் ஆசியுரையில் 'இவ்வாய்வு அம்மையாருக்கு எம். ஃபில் பட்டத்தைப் பெற்றுத் தந்ததோடு, அபிராமி அம்மையின் பேரருளையும் பெறச் செய்திருக்கிறது' எனக் குறித்தருளுவது, எவ்வளவு உண்மையானது என்பதை இந்நூலைப் பயில்வார் எளிதில் உணர்வர். திருமதி. சௌந்தராகைலாசம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், டாக்டர் இரா. செல்வக்கணபதி ஆகியோரின் அணிந்துரைகள் நூலைத் திறந்தெரிந்து கற்கத் துணையாக அமைந்துள்ளன.

அபிராமித் தாயின் திருவடிகளில் சூட்டப்பெற்ற மணமலராகத் திகழும் இந்நூலைச் சைவத் தமிழ்ப் பேரன்பர்கள் பெரிதும் ஏற்றுப் போற்றுவர் என்பது திண்ணம்.

த. ஆ. கலைக்கல்லூரி,
தருமபுரம்.

— வி. சா. குருசாமி தேசிகர்,
முதல்வர்.

சிறுத்தொண்டர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 2—10—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

நாட்காட்டி அன்று காந்தி ஜெயந்தி என்று காட்டியது! அன்று முதல் ஞாயிறும் கூட!

தேசபக்தியும் தெய்வபக்தியும் நம் இருகண்களல்லவா! தேசிய ஒருமைப்பாட்டை உயிர்மூச்சாகக் கொண்ட சமயமல்லவா சைவம்! காந்தி ஜெயந்தி நாளில் தெய்வசிந்தனை – சைவசிந்தனை முக்கிய மான அங்கம்! மகிழ்வோடு திருமடம் சேர்ந்தேன்!

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீ சொக்கநாதர், மற்றும் தருமைத் திருக்கோயில்களில் வழிபாடு ஆற்றி, பண்டாரக்கட்டுக்கு எழுந்தருளினார்கள். சித்திராசனத்தில் அமர்ந்தார்கள். அன்பர்கள் பக்திசிரத்தையோடு குருமணிகளை வழிபட்டனர்; திருநீறு கொண்டு பூசி மகிழ்ந்தனர்; அமர்ந்தனர். திருமுறைப் பாராயணத்தைத் தொடர்ந்து வித்யாவசஸ்பதி, ஆனந்ததாண்டவபுரம் பிரம்மஸ்ரீ. இராமதாசஐயர் உரையாற்றினார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் குருதோத்திரம் செய்துகொண்டு அருளுபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச் சிறப்பு நாள்கள் பற்றிப் பல குறிப்புக்களை அருளினார்கள். அருளுபதேசத் திருநாளில் காந்தி ஜெயந்தியும் இணைந்தது. பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா காந்தியை நினைவு கூர்ந்தார்கள். திருத்தொண்டர் புராணத்தில் சிறுத்தொண்டர் வரலாறு அருளும்வகையில் முதலில் வரலாற்றைச் சுருக்கமாகத் திருவாய் மலர்ந்தார்கள். சிவபெருமான் கொண்ட பயிரவக்கோலம், 'தனிப்புகுதோம்' என்று அருளியவாக்கின் சிறப்பு, உச்சி மோவாது பிள்ளைக்கறி சமைத்தமை முதலியவைகள் பற்றிய விளக்கமாக அருளுபதேசம் அமைந்தது.

பயிரவம் என்பது வயிரவம் என்னும் அகப்புறச் சமயம். சிறுத் தொண்டரின் மெய்யன்பினை நுகர்தற்கு இறைவன் பைரவச்

சங்கம, (பைராகி) வேடம் கொண்டார். திருக்கயிலாயமலையி னின்றும் புறப்பட்டார். நீண்ட செஞ்சடையைக் காளமேகச் சுருள் போல அசையுமாறு அழகுபொருந்தப் பரப்பிமுடித்தார். மேகத்தின் இடையே விண்மீன்கள் மின்னுவதுபோல இடையிடையே தும்பைப் பூக்கள் ஒளிவீசின. தம் திருமுடியில் உள்ள இளம்பிறையைச் சிறு பிறையாக மாற்றித் திருநெற்றியில் திருநீற்றுப்பொட்டு ஆக்கினர். சந்திர, சூரிய, அக்கினி மண்டலங்கள் ஒருசேர அமைந்தது போலச் சங்குக் குழையுடன் செவ்வரத்த மலர்களைத் திருச்செவியில் செரு கினர். திருக்கண்டத்தில் அமைந்த விடத்தினை மறைத்தருளும் பொருட்டு, பளிங்கு மணியினல் ஆகிய வடங்களைக் கழுத்தில் அணிந்தார். அழகிய சிவந்த திருமேனியின்மேல் கரிய யானைத் தோலை உடுத்தார். இக்காட்சி மாலைக்காலச் சிவந்த ஒளியை இருள் அடர்ந்த இரவுப் பொழுது சூழ்ந்தது போல் இருந்தது. மாலைக்காலச் செவ்வொளி சிவபெருமானைப் போலவும், அவ் வொளியைச் சூழ்ந்த இருள் பெருமான் போர்த்திக் கொண்ட யானைத் தோலைப் போலவும் இருந்தது என்பது சேக்கிழாரின் தெய்வக் கவிச்சிறப்பைக் காட்டுவதாயுள்ளது. அக்குமணிகளால் ஆகிய வெற்றிமாலை, முத்துமாலை, பல அணிகள் விளங்கத் தோன்றினர். அன்பர்களின் அன்பே அவர் திருமேனியில் ஆபரணங் களாக விளங்கின.

இடத்திருக்கரத்திலே மூவிலைச்சூலத்தை ஏந்தித் திருத்தோளில் சார்த்தியிருந்தார். வலக்கரத்தில் உடுக்கைதாங்கி ஒலித்தார். அவர் திருவடிச்சிலம்புகள், "இறைவனதுதிருவருளை விரும்பிப்போற்றுவீர்! அன்பின் வழியே நிற்பீர் ஆகுக" என வேதங்கள் கூறுவதுபோல் ஒலித்தன. நிலம், முன்னைத் தவப் பயனல் திருவடித் தாமரைகளைத் தாங்கியது. திருமுகத்தில் புன்முறுவல் தவழ, மும்மலங்களைக் கெடுக்கும் முத்தலைச் சூலம் ஒளிவீசிட, அன்பு தழைக்கச் சிவ பெருமான் பைரவ வேடத்துடன் திருச்செங்காட்டங்குடி மேவினர்.

அழகே வடிவமாக எழுந்தருளினர் பயிரவர். திருமனை உசாவி அடைந்தார். 'சிறுத்தொண்டர் உள்ளாரோ?' என வினவினர். சந்தனத்தாதியாரும், அடுத்து, சிறுத்தொண்டர் மனைவியாரும் அடியார்க்கு விடை பகர்ந்தனர். சிறுத்தொண்டர் வெளியில் அடியாரைத் தேடிச் சென்றுள்ளார் என்பது அறிந்தார் பைரவர். "மாதரார் தாம் இருந்த இடவகையில் தனிப்புகுதோம்" என்றார். பெண்கள் தனித்திருக்கும் இடத்தில் ஆடவர் செல்லல் அறமன்று - மேலும் அழகு என்பது மயக்குவது - தாம் கொண்ட வடிவு மன மயக்கம் தரும் எனக் கருதிய பயிரவர் அங்கிருந்து அகல எண்ணித் 'தனிப்புகுதோம்' என்றார். இங்ஙனம் சீரியசிந்தனைவழங்கிப்பொருள்

விளக்கம் அருளினர்கள். மேலும் இங்கு "மாதரார் தாமிருந்த இடவகையில் தனிபுகுதோம்'' என்றவர், காரைக்காலம்மையார் வரலாற்றில் 'பரமனர் திருத்தொண்டர் உணவின் மிகுவேட்கை யினுல் ஒருவர் மனையுட்புகுந்தார் என்பது முரணுகாதோ' என்பார் சிலர். அம்மையார் வரலாற்றில் வந்த அடியவர் "மூப்புறும் அத்தளச் வாலும் முதிர்ந்து முடுகிய வேட்கைத் தீப்பசியின் நிலையாலும் அயர்ந்தணைந்த திருத்தொண்டர்" என வந்தார். இங்கு வந்த அடியவர் சித்தமகிழ் வயிரவராய் இளமையும் அழகும் அணிகலன் களும் பூண்ட திருக்கோலத்துடன் வந்தார். எனவே இவை தம்முள் முரண்பாடில்லை என ஒப்பிட்டு அருளினர்கள்.

சிறுத்தொண்டர் பைரவரைச் சந்தித்துத் தம் திருமனையில அமுது செய்ய வேண்டினர். அப்போது, பயிரவர் "உமைக் காணும் படியால் வந்தோம்; உத்தராபதியோம். எம்மைப் பரிந்தூட்ட முடியாது; உமக்கு இச்செய்கை அரிது; ஒண்ணுது'' என்று மொழிந் தார். முடியாது, அரிது, ஒண்ணுது - என்ற மூன்று சொற்களால் பைரவர் தொடர்ந்து தாம் அருளப் போகும் நிலைக்குக் கால் கோளாகக் கூறும் முறையை உளங்கொளத் தெளிவுபடுத்தினர்கள். பைரவர்க்கு விடையாகச் சிறுத்தொண்டர் "தண்ணுர் இதழி முடியார் தம் அடியார் தலைப்பட்டால், தேட ஒண்ணுதனவும் உளவாகும்'' "அரியதில்லை'' என மொழிந்தார். சிவனடியார் சிறப்பை விளக்கும் இத்தொடர்ப் பொருளைத் தத்துவச் செறிவோடு புலப்படுத்தினர்கள். பயிரவர் அடுத்து, "மூவிருது கழிந்தால் உண் பது" என்றதன் பொருளைத் தெளிவு படுத்தினர்கள். சிவ ஆகமங் களில் பயிரவர் விரதநாட்களாகச் சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி என இருநாட்கள் குறிக்கப்படுகின்றன. இவை ஆறு மாதங்கட்கு ஒன்ருக அமைந்துள்ளன. "ஆறு மாதம் கழிந்தால் ஒருபொழுது நாம் உண்பது நியமம். அதனுக்கு உரியநாள் இன்று" எனச் சித்திரைப் பரணிநாளைக் குறித்தார். இங்ஙனம் தெளிவான விளக்கம் அருளிய குருமணிகள் கறிசமைக்குங்கால் நிகழ்ந்த செயல் களில் சிலவற்றுக்குத் தத்துவம் புலப்படுத்தினர்கள்.

சீராளரை நன்கு தூய்மைப்படுத்தினர் பெற்ருேர். "குறை பாடற்ற அடியார்க்கு இவன் உணவு ஆகப் போகிருன்'' என மனத்தில் உன்னினர். உச்சிமோவாமல், மார்பில் அணைக்காமல், 'முத்தம் தந்தால் எச்சிலாகுமே' எனக்கருதி முத்தம் தராமல், கறி சமைக்கும் நோக்குடன் வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றனர். 'சிவனடியார்க்கு அமுது படைக்கும் போது, எவ்வகையிலும் அநுசிதம் நிகழ்தல் தகாது' என்னும் நெறியை இதன் வாயிலாக உணர்வித்தார்கள்.

"அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது" எனக் கழித்துச் சந்தனத்தாதியார் கையில் கொடுத்தனர் பெற்றோர். அதனையும் கறிசமைத்து வைத்தார் தாதியார். பின்னர், பயிரவர் அமுதுண்ண அமருமுன் "சொன்னமுறையில் படுத்த பசுவின் தொடர்ந்த உறுப்பெல்லாம் கறி சமைத்திரோ" என வினவினர். அதுபோது தாதியாரின் செயல் உதவியாய் அமைந்தமையைச் சுட்டிச் சீராளர் முழுவுருவம் பெற்றுவரத் தலைக்கறி, துணையாயின மையையும், இந்நிலையும் திருவருளால் நிகழ்ந்ததேயன்றி, சந்தனத் தாதியார் ஏதும் அறிந்து செய்தாரிலர் என்பதையும் மீண்டும் உளங்கொளத் தெளிவித்தார்கள்.

சிறுத்தொண்டர், தம்மனைவி, மகன், தாதியாருடன் சாமீப முத்திப்பேறு எய்தினர். இதனைச் சேக்கிழார்,

" கொன்றை வேணி யார்தாமும் பாகம்கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும்தம் விரைப்பூங் கமலச்
[சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனர் தாதியார்
என்றும் பிரியா தேஇறைஞ்சி இருக்க உடன்கொண் டேகினர்"

என அருளிச் செய்தார். சிவபெருமான் காட்சி தந்த போதும் உமாதேவி, முருகப்பெருமானோடு சோமாஸ்கந்தராக எழுந்தருளி யமையும், உமாதேவியோடு இடபாரூடராகவும் மற்றும் பலவகை யிலும் அடியார்கட்கு அருள்வழங்கிய பெருமான் இவருக்குமட்டும் "மலைபயந்த தையலோடும் சரவணத்துத் தனயரோடும்" சோமாஸ்கந்தராகக் காட்சியளித்து உடன்கொண்டு சாமீப்யநிலை யருளியமையும் இப்புராணத்தில் காணுதற்கு உரிய சிறப்பு எனப் புலப்படுத்தி உய்வித்தார்கள்.

இங்ஙனம், புராணநுட்பங்களைத் தத்துவச் செறிவோடு தக்க சான்றுகளுடன் மனங்கொள்வித்து உபதேச நிறைவு செய்தார்கள். இன்சுவைக்கனிச்சாறு பண்டாரக்கட்டிற்குவெளியே காத்திருந்தது. அலுவலகத்து இளைஞர்கள் அன்புகலந்து அளித்தனர்; பருகிமகிழ்ந் தோம்; இனிய சிந்தனைகளோடு இல்லம் ஏகினோம்.

எல்லாரும் மனம்கொள்ள எடுத்துரைத்துக் கதை விளக்கும்
அல்மறைத்த கண்டத்தெம் அமுதே! நின் தாள்போற்றி!

வாழ்க குருமணிகள் !

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்
ஸ்ரீ அபிராமி அம்மை சந்நிதியில்
தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்



'அபிராமி அந்தாதி ஆராய்ச்சி' - நூலை வெளியிட்டு
நூலாசிரியர் திருமதி. தேவகி முத்தையா அவர்கட்கு ஆசியருளி வழங்கு
5—2—1988.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்
ஸ்ரீ அபிராமி அம்மை சந்நிதியில்
தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

தொழிலதிபர் திரு. A. C. முத்தையா அவர்கட்கு
ஸ்ரீ அபிராமி அம்மை படம் வழங்கியருளல்
5–2–1988.

உ

குருபாதம்

தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டம், திருச்சிற்றம்பலம் அருள்மிகு. மகா மாரியம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மகாகும்பாபிடேகம்

14—9—1988 புதன்கிழமை காலை நடைபெற்ற ஞான்று எழுந்தருளி, அன்பர்களிடையே அருளாசி வழங்கியருளிய

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அவர்களுக்கு,

கிராமவாசிகள் சார்பாகப் படித்தளிக்கப்பெற்ற

வரவேற்பு வணக்க மடல்

சைவத்தின் கண்மணியே -
சரித்திரத்தின் பொன்மணியே, வருக! வருக!

'சைவ சமயமே சமயம்' என்ற உறைப்போடு, புறநெறிசாராது, சைவத்தில் ஊன்றி நின்று சிவநெறியையும், செந்தமிழையும் வளர்த்த சோழமாமன்னர் திருநாட்டில், காவிரியின் வடகரையில், சிவராஜதானியாக விளங்கும் தில்லைக்கும், முதல் ஆசாரியராகிய திருஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழிப் பெரும் பதிக்கும் இடையில், ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியர் பிறந்த, தொல் காப்பியக்குடியை அடுத்து, தில்லைச் சிற்றம்பலவன் அற்புதத் தனிக் கூத்தியற்றும், அம்பலத்தின் பெயரையே பெயராகக் கொண்டு 'திருச்சிற்றம்பலம்' என்ற பெயர் பூண்டு விளங்கும் அழகிய, நில வளமும், மக்கள் மனவளமும் கொண்ட சிற்றூர் எம்ஊர். இவ்வூரின் நடுநாயகமாக அருள்மிகு. சீதளாம்பிகை என்ற நாமத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளி, பல்லாயிரம் மக்களின் நலம்பேணும் அன்னையாக, வேண்டுவார்க்கு வேண்டும் வரம் அருளும் பராசக்தி யாக அன்னை மகா மாரியம்மன் அருள்பாலித்து வருகின்றாள். சீரும் சிறப்புமாக நடைபெற்ற இவ்வம்மையின் திருக்கோயில் குடமுழுக்கு விழா, தருமை வளர் தவமணியே! தமிழ் உணர்ந்த நன்மணியே! சைவத்தின் கண்மணியே! சரித்திரத்தின் பொன்மணியே! தங்கள் வருகையால் தன்னேரிலாத சிறப்பைப் பெற்றது. எங்கள் நெஞ்சத்தில், மகிழ்வில் மலர்ந்த அன்பு மலர்களைத் தங்கள் தாள் மலர்களில் பணிவுடன் இட்டு, வருக! வருக! என வணங்கி வரவேற்கிறோம்.

அளப்பரும் தவம் மிக்க அருமணியே, வருக! வருக!

தருமைக் குருமணியே! தமிழ்வளர்க்கும் அருமணியே! கயிலாய பரம்பரைக்குக் கவின்செய்யும் தூமணியே! தவம் செய்த தவமாய், தருமை ஞானபீடத்தை அலங்கரிக்கும் தனிப்பெரும் குணமணியே! அறங்களில் எல்லாம் சிறந்த துறவறத்திற்கு அழகு சேர்த்த தவமணியே! திருமுதுகுன்றப் பெருமான் திருவடிகளில் பத்திமை பூண்டு, இளமையிலேயே திருமுறைகளைக் கற்றுத் தேர்ந்தீர்கள். ஸ்ரீ காசி மடத்தின் அருள் நிழலில் இசைத்திறத்தால் திருமுறைக்கு அழகு செய்தீர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் கடைக் கண் அருளால் தருமைத் திருக்கூட்டத்திற்குத் தலைமை ஏற்றீர்கள். கற்ற கல்லூரியிலேயே ஆசிரியப் பணி பூண்டு அருந்தமிழ் வளர்த்தீர்கள். தமிழகத் தலைநகரில் ஆதீனப் புகழை அகிலமெலாம் பரவச் செய்தீர்கள். திருவாமூரில் அப்பருக்கோர் ஆலயம் அமைத் தீர்கள். பெண்ணாகடத்தில் மெய்கண்டார் பெருங்கோயில் புதுப் பித்தீர்கள்! தருமை ஞானபீடம் ஏறி, தவ, ஞான, ஒழுக்கங்களுக்கு அணிசெய்தீர்கள். கதிரவனைக் கண்ணுக்குள் சிறை பிடிக்க முயல்வார்போல், அறியாமையால் தங்கள் தொண்டுகளை ஏட்டுள் அடக்க நினைத்துத் தோற்கிறோம். அளப்பரும் தவம் மிக்க அருமணியே! தங்கள் எழுந்தருளுகையில் இதயம் களித்து, இரு கரம் கூப்பித் தலையால் வணங்கி வரவேற்கிறோம்.

சொக்கன் தாள் மறவாத தூமணியே, வருக! வருக!

குருஞானசம்பந்தர் பணிமன்றம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், திருக்கோயில்களுக்கு வைப்பு நிதி, சைவத் தமிழ் வளர்ச்சிக்கு ஞானசம்பந்தம் பதிப்பகம், சைவசித்தாந்த மாலைநேர வகுப்புகள், நாடெங்கும் எழுந்தருளி நல்லுரையாற்றும் தொண்டு, தொடர்ந்து நடத்திவரும் திருக்கோயில் திருப்பணிகள், நாள் தவறாத சொக்கேசன் வழிபாடு – இப்படி நீண்டுகொண்டே செல்லும் பல்துறைப் பணிகளை விரித்தால் நீள்கின்றது! தொகுத்தாலோ எஞ்சுகிறது! தமிழ்வாழ, தமிழர் சமுதாயம் வாழ, சைவம் தழைக்க, சைவ சித்தாந்தத் தூநெறி உலகெலாம் ஓங்க, தங்கள் அருளாட்சியில் தருமை ஆதீனம் தரணிக்கே வழிகாட்ட எல்லாம் வல்ல அருள்மிகு. மகா மாரியம்மனின் தாள் மலர்களைப் பிரார்த்தித்து, வருக! வருக என வாழ்த்தி, வணங்கி வரவேற்று மகிழ்கின்றோம்.

இன்னணம்,

திருச்சிற்றம்பலம்
14—9—1988 } சு. விசுவலிங்கம் மற்றும் கிராமவாசிகள்.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph.D., D. P. P. A., D, U. N., I. U
பருத்தியூர்.

குழையத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கை [வல்லி,
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும், வெண்ண [கையும்
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் [உதிக்கின்றவே.

அ. குழையத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கை வல்லி.

(1) குழையும்படி தன்னைத் தழுவிய சிவபெருமானது கொன்றைமாலை பொருந்தியதால் மணம் கமழ்கின்ற திருத்தனங்களை உடைய கொடி எனப் புகழுகிறார்.

(2) பெருமானின் அகங் குழைதல், பெருமாட்டியின் உள்ளம் குழைதல், கொன்றையந்தார் குழைதல் ஆகிய மூன்றினையும் 'குழைய' என்ற சொல் குறித்து நின்றது.

(3) ஊடல் தீர்த்தல் பொருட்டு இறைவன் குழையத் தழுவுகிறான். அம்பிகை காமாட்சியாகி வந்தபொழுது ஐயனைத்தழுவினாள். இராவணன் மலை எடுத்த பொழுது அன்னை ஐயனைத் தழுவினாள். அது போன்ற தழுவுதல் நிகழும் பொழுதெல்லாம் இறைவன் திருமார்பில் அணிந்திருக்கும் கொன்றைமாலை அன்னையின் திருமார்பில் பொருந்துகிறது. அப்போது அக்கொன்றையின்

மணம் அவளது திருமார்பகத்தில் ஏறிக் கமழ்கிறது. மலர் அல்லது கனியினைத் தாங்குதல் கொடியின் இயல்பு. பர அபர ஞான மென்னும் கனிகளைத் தாங்குவதால் அவளைக் 'கொங்கை வல்லி' என்றார்.

(4) பிரணவத்தை உணர்த்தும் கொன்றையும் ஞானத்தை உணர்த்தும் கொங்கையும் பொருந்தும் நிலை குறிப்பிடப்படுகிறது. ஞானத்தின் பயன் பிரணவாகாரமான இறைவனைப் பொருந்துதலே என்பது அதன் உட்கருத்து.

ஆ. கழையைப் பொருத திருநெடுந்தோள்.

(1) அவளது நீண்ட திருத்தோள்கள் மூங்கிலைப் பொருது வென்ற சிறப்புடையது.

(2) பெண்களின் தோளுக்கு மூங்கிலை உவமை கூறும் மரபுப்படி கழையைப் பொருத தோள் என்றார். கழை - மூங்கில்.

அமையுறு தோளியர் என்றார் முன்பு அபிராமிபட்டர். 'வேயுறு தோளி' என்றார் ஞானப் பிள்ளையார்.

(3) பண்டன், மகிடன், போன்ற அசுரர்களை வதைத்தவலிமை பெற்றவள் அம்பிகை. எண் பெரும் வீரம்விளைந்த ஈசனைப் பொருந் தும் தோள்களைப் பெற்றவள். எனவே 'திருநெடுந்தோள்' எனச் சிறப்பித்தார்.

(4) மூங்கிலைச் 'சங்கேத' மாக வடநூலார் 'வம்சம்' என்பர், தம்பதிகள் அன்பால் 'விழையப் பொருதச்செய்யும் வேரியம்பாணம்' அவர்களின் வம்சம் தழைக்கச் செய்யும் என்பதனைக் குறிப்பால் உணர்த்துவதுபோல் இங்குக் 'கழை'யினைக் குறிப்பிட்டார்.

இ. கருப்பு வில், விழையப் பொருதிறல் வேரியம் பாணம்.

(1) அவளது கரும்பு வில்லும், வேரியம் பாணமும் (தேன் பொருந்திய மலர்க்கணையும்) தம்பதிகளை அன்பால் பிணைக்கும் இயல்புடையது. திறமையுடையது.

(2) இரண்டாவது பாடல் போலவே இங்கும் 'கருப்பு வில்' என்று வலித்தல் விகாரமாய்க் கூறினர். அதன் நயம் அங்குக் கண்டோம்.

"ஆசலம் புரி ஐம்பொறிவாளியும் நெறியிற் புறஞ் செலாது" என்பான் கம்பன். அதாவது ஐம்புலனும் கோசலத்தில் அறத்திற்கு மாருகச் செயல்படுவதில்லை என்ருல் அத்தகைய நெறியான வாழ்க்கையில் தம்பதிகளைச் செலுத்தி, புறஞ்செலா மனஉறுதியை அளிப்பதால் இங்கும் வலித்தல் விகாரம் வந்தது.

(3) அம்பிகை திரிபுரசுந்தரி கோலத்தில் தாங்கும் கரும்பு வில்லும் மலர்க்கணையும் அபிராமி கோலத்திலும் உண்டு. அவை காமனது கணைகளைப் போல் உடலில் நிகழும் சரீர இச்சையைத் (காமத்தைத்) தூண்டாது உள்ளத்தால் பிணைக்கும் தன்மையினை யுடையது. "ஒருவரையொருவர் உள்ளம் ஈர்த்தலால் மாறிப்புக்கு இதயம் எய்தும்" மாண்பினையே விளைவிப்பது. ஆதலால் அதனை "விழையப் பொருதிறல் வேரியம் பாணம்" என்ருர்.

ஈ. வெண்ணகை, உழையைப் பொருகண்.

(1) அவள் முத்துப்போன்ற முறுவலும் மானினது பார்வையைக் கொண்ட கண்களும் உடையவள்.

(2) முத்துப்போன்ற பற்கள் சிறிதே வெளியில் தோன்றச் சிரிக்கும் மகளிரின் முறுவலை "வெண்ணகை" என்பர். "முத்தன்ன வெண்ணகையாய்" என்று திருவெம்பாவை உரைக்கும்.

அப்பரின் தேவாரம் பெற்ற திருப்பாலைத்துறை (தஞ்சை பாபநாசத்தை அடுத்திருப்பது) என்ற தலத்தில் உறையும் அம்பிகையின் பெயரே 'தவள வெண்ணகையாள்' என்பதாகும்.

(3) அன்பு நிறைந்த பெண்ணின் பார்வையில் சொக்கி விழுக்கும் கவர்ச்சியின்றி, 'மடம்' நிறைந்த மருட்சியே காணப்படும். அப்பார்வை மானினது பார்வை போன்று இருக்கும். 'மானே முதுகண்' என்ருர் முன்பும். "மானின் நேர்விழி மாதராய்!" போன்ற திருமுறைச் சொற்ருெடர்களிலும் இவ்வுவமையினைக் காண்கிருேம்.

உ. எப்போதும் என்நெஞ்சில் உதிக்கின்றவே.

(1) மேற்கூறிய திருநெடுந்தோள், கருப்புவில், வேரியம் பாணம், வெண்ணகை போன்றவையே எளியேனது நெஞ்சத்தில் எக்காலத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிறது என்கிருர்.

(2) 'ஸதா உதிதா' என்கிறது சகஸ்ரநாமம். அதாவது அவள் எப்போதும் உதித்துக் கொண்டிருக்கிருள் அல்லது தோன்றிக் கொண்டிருக்கிருள். ''காளி பராசக்தி அவள் கணந்தோறும் பிறப்பாள்'' என்பார் பாரதியார்.

(3) அந்தாதி 'உதிக்கின்ற' என்று தொடங்கி உதிக்கின்றவே என்று நிறைவு பெறுகிறது, ஆதியும் உதயம்! அந்தமும் உதயம். அஸ்தமனம் என்பதே இல்லை! ஆ! அம்பிகையினை வழிபடும் அடியாரின் வாழ்வு என்றும் இருள் இன்றி ஒளிமயமாகவே அமையும் என்பதனை உணர்த்துகிறது இச்சிறந்த அந்தாதித் தொடை அமைப்பு!

(4) முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல் உண்கண் வேய்த்தோள் அவட்கு.

என்ற திருக்குறளுக்கு, பேரின்ப நோக்கில் பொருள் கொண்டால் அது வெண்ணகை, கழையைப் பொருத நெடுந்தோள், கொண்றையந்தார் கமழ்தல் ஆகிய வகையில் அந்தாதிக் கருத்தோடு ஒத்திருக்கின்றது.

தம்பதிகள் அன்பால் பிணைப்புற்று வாழ்தலும் பிரிந்த தம்பதிகள் கூடுதலும் இப்பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

தருமை ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

பார்வையாளர் குறிப்பு நகல்

இன்று ஸ்ரீ சரபேசுவரருக்கு ஏகதின லட்சார்ச்சனை செய்தேன். மிகவும் சிறப்பாக நல்ல முறையில் ஆலய சிப்பந்திகள் நடத்திக் கொடுத்தனர். எல்லாம் மிகச்சிறப்பாக நடந்தமையால் மனத்துக்கு திருப்தியாக, சந்தோஷமாக இருக்கிறது. இது மாதிரி மேன்மேலும் பக்த ஜனங்களுக்கு நடத்திக் கொடுத்து ஆண்டவன் அருளை அடைய வைக்கும்படி வேண்டுகிறேம்.

(ஒ-ம்) சிவராமய்யர்
வி. ராமச்சந்திரய்யர்
(நேஷனல் ஹைஸ்கூல் கரஸ்பாண்டென்ட்)
91, முதல்தெரு, மன்னார்குடி
தஞ்சை மாவட்டம்.

23—9—88

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 9, பக்கம் 533 இன் தொடர்ச்சி.)

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (4)

(கி. மு. 384-322)

இரு தர்க்கத்திற்குமுள்ள இணைப்பு :

தர்க்கசாத்திரம் இருவகைப்படும் என்பதை முன்னர்கண்டோம். அனுமானப் பிரமாணத் தர்க்கம் (Deductive Logic) என்பது பற்றி அரிஸ்டாட்டில் அழுத்தமாகக் கூறினர். இதனைப் பகுப்பு வழித் தர்க்கம் என்றும் பகர்வதுண்டு. பிறிதொன்று பிரேரணைப் பிரமாணத் தர்க்கம் (Inductive Logic) என அழைக்கப்படும். இதனைத் தொகுப்பு வழித் தர்க்கம் என்றும் இயம்பலாம். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்ப்பானவை அல்ல; அதற்குமாருக இணைப்பானவை என்று இசைப்பதே சரி. வித்து முதலா? விருட்சம் முதலா? என்ற வாதம் போன்றது. பகுப்பு வழித் தர்க்கத்திலிருந்து தொகுப்பு வழித் தர்க்கம் தோன்றியதா? அல்லது தொகுப்பு வழித் தர்க்கத்திலிருந்து பகுப்பு வழித் தர்க்கம் வந்ததா? என்பது தர்க்க வாதிகளிடையே இன்றும் தர்க்கமாக இருக்கிறது. ஆனல் பகுப்பு வழியும், தொகுப்பு வழியும் பகைமையானவையல்ல என்பதில் இச்சாத்திரத்தைப் படித்தவர்களிடையே பேதம் இல்லை. ஒன்றுக்கொன்று இணைப்பு உடைமையை இருபாலாரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

தொகுப்புமுறைத் தர்க்கம் :

முக்கூற்று நியாயத்தில் (Syllogism) பிரதானக் கூற்று (Major Premise) இருக்கும். அஃது உலகளாவிய உண்மையைக் கொண்டதாக (Universal truth) இலங்கும். அதனைத் தொடர்ந்து மாதிரிக் கூற்று (Minor Premise) ஒன்று எடுத்துக் கொள்ளப்படும். இவ்விரண்டையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு முடிவு (Conclusion) எளிதில் கிடைக்கும். வழக்கமான உதாரணத்தை மீண்டும் நினைவு கூர்வோம்.

" எல்லா மாந்தர்களும் இறக்கக் கூடியவர் (பி. கூ.)
சாக்ரட்டீஸ் ஒரு மனிதர் (மா. கூ.)
சாக்ரட்டீஸ் இறக்கக் கூடியவர் (மு.)

இதில் பொதுமையானதைக் கொண்டு, மாதிரி ஒன்றைக் கண்டு, முடிவினை ஒன்று எடுக்கிறோம். ஆனால் தொகுப்பு முறைத் தர்க்கத்தில் (Inductive Logic) இஃது இங்ஙனம் இராமல் மாறுதல் ஆகிறது. ஓர் உதாரணம் எடுத்துக் கொள்ளுவோம்.

கம்பர் இறந்தார். காளிதாஸர் இறந்தார். மற்றும் பலரும் இறக்கின்றனர். இவர்கள் மனிதர்கள். எல்லா மனிதரும் இறக்கக் கூடியவர்.

தொகுப்புமுறைவாதிகள் வாதம் யாதெனில் தனித்தனி நிகழ்ச்சிகளைக் காண்கிறோம். அவற்றுக்கிடையே ஒருமைப்பாடு இருப்பதை உணர்கிறோம். அதனை அடிப்படையாகக் கொண்டு ஒருபொது விதியினை அல்லது உலகு அளாவிய ஓர் உண்மையை (universal truth) அடைகிறோம். நியூட்டன் ஆப்பிள் பழம் மரத்திலிருந்து கீழே விழுந்ததைக் கண்டான். ஏன் இப்பழம் மேலே போகாமல் கீழே விழுகிறது? என்ற வினாவை எழுப்பினான் – விடையைக் கண்டான். "எப்பொருளையும் தன்பால் ஈர்க்கும் சக்தி பூமிக்கு இருக்கிறது" என்று ஓர் உலகளாவிய உண்மையை ஸ்தாபித்தான். நாமும் நம் சொந்த அனுபவத்தில் இதைக் காண்கிறோம். ஒரு கல்லை மேலே விட்டெறிந்தால் அஃது உடனே பூமியின் ஈர்ப்பு சக்தியால் கீழே விழுகிறது. மேகம் மழைபொழிந்தால் மழைநீர் பூமிநோக்கி வீழ்கிறது. இஃது எல்லோரது அனுபவத்திற்கும் இசைந்ததாக இருக்கிறது அல்லவா?

இம்முறையில், குறிப்பிட்ட சிலவற்றிலிருந்து பொது உண்மையைப் பெறுகிறோம். (From Particular to General) இதையே அரிஸ்டாட்டில் முக்கூற்று நியாய முறையில் அறிவிக்கும் போது இங்ஙனம் வாதம் அமையும்.

பூமிக்கு, விழும் பொருள் எதனையும் தன்பால் கொள்ளும் [ஈர்ப்பு சக்தி உண்டு.
ஆப்பிள் பழம் என்ற பொருள் விழுகிறது.
ஆப்பிள் பழம் ஈர்ப்பு சக்தியால் பூமியில் விழும்.

தொகுப்பு முறைக்கும் பகுப்பு முறைக்கும் பகையான யாதொரு முரண்பாடும் இல்லை எனினும் ஃபிரான்ஸிஸ் பேகன் (Francis Bacon) என்ற பேறிஞர் கூறுகிறார். "தொகுப்புமுறை சில சில நிகழ்ச்சிகளைக் கூறியவாறு மட்டுமே தொடர்கிறது. இஃது ஒரு

பிள்ளைத்தனம். ஏதுவாகக்கொள்ள எவ்வித அடிப்படையும் இல்லாமல் இருக்கிறது. இதற்கு எதிரிடையான ஒன்றைக் கூறி இதனை எளிதில் எடுத்தெறிந்து விடலாம்'' என்கிறார். "Induction which proceeds by merely citing instances" says Bacon, "is a childish affair and being without any certain Pruinciple of inference, it may be over - thrown by a contradicting instance.''

பொதுக்கருத்து ஆக்குதல் :

பல நிகழ்ச்சிகளைக் கண்டு அதைக் கொண்டு ஒரு பொதுக் கருத்தாக்குதல் (Generalisation) ஆபத்தான ஒன்றாகும். அப்படி ஆக்கும் போது அஃது ஒருகால் ஏற்பு உடையதாக இல்லாமலும் போதல் உண்டு. அணு (atom) பிரிக்க முடியாதது என்றதோர் ஆழ்ந்த நம்பிக்கை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் அணுவினுள் ஆழ்ந்த சக்திகள் பிரிக்குங்கால் வெளிப்படுகின்றன என்பது இன்றைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஜப்பானியர் சாதாரணமாக 5 அல்லது 5½ அடிக்கு மேல் உயரம் இருப்பதில்லை. எனவே மனிதர்கள் யாரும் 5½ அடி உயரத்திற்கு மேல் இருப்பதில்லை என்று கொண்டால் அஃது உண்மையான முடிவாக இருக்க இயலாது. அமெரிக்கர்கள் 6½ அடி உயரம் உள்ளவர்களும் உள்ளனர். நீக்ரோக்கள் வாழும் நாட்டிற்குச் சென்ற ஒருவன் சகல மனிதரும் கருப்பர்களாக இருக்கக் காண்கிறான். எனவே மனிதர்கள் எல்லோரும் கருப்பர்கள் என்ற முடிவுக்கு வந்தால் அஃது அறிவுக்குப் பொருந்தாததோர் அர்த்தமற்ற கூற்றாக முடியும். எனவே தொகுப்பு வழித்தர்க்க முறைப்படி (Inductive method) 'பொதுக்கருத்தாக்கும் முறை, (Generalisation) ஆபத்தானது என்பது அரிஸ்டாட்டிலின் சித்தாந்தம். எனவே பொதுமையிலிருந்து மாதிரிக்கு வருவது. (From general to particular) பின் முடிவெடுப்பதே முறை என்பார் அரிஸ்டாட்டில்.

தொகுப்பு முறையும் பகுப்பு முறையும் - ஓர் ஒப்பீடு :

விஞ்ஞான உண்மைகளாக (Scientific Truth) நாம் இன்று காணும் ஒவ்வொன்றும் தொகுப்புமுறை மூலமாக (Induction) வே விதியாகி இருக்க வேண்டும். நியூட்டன் கண்ட "பூமியின் ஈர்ப்பு சக்தி" யையே (Graivtation of the Earth) உதாரணமாகக் கொள்ளலாம். இந்த ஆய்வு எல்லோருக்கும் அனுபவமாகக் கண்டு தெளியவேண்டிய அவசியம் யாதொன்றும் இல்லை. நியூட்டன் கண்ட உலகளாவிய உண்மை. எல்லா விஞ்ஞானிகளும், எல்லா

நாட்டாரும் ஏற்றுக் கொண்ட உண்மை. இதிலிருந்து பகுப்பு முறையில் இவ்வுண்மையைக் கையாளலாம். "எல்லா மனிதரும் இறக்கக் கூடியவர்களே"-இவ்வுண்மை எக்காலும், எந்நாட்டிலும் எச்சூழ்நிலையிலும் உண்மையானதும் உலகளாவியதுமாக நிற்கிறது. எனவே தொகுப்பு முறையும் பகுப்பு முறையும் இணைபிரியாத இரு தோழர்கள் போல, ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதாகவும், ஒன்றுக்கொன்று நிறைவு செய்வதாகவும், ஒன்றுக் கொன்று இணைப்பு உள்ளதாகவும், தொகுப்பும் பகுப்பும் துணை செய்து கொள்கின்றன என்றால் அது மிகையாகாது.

எல்லோராலும் தொகுப்பு முறையைச் சொந்த அனுபவம் ஆக்கிக் கொள்ள இயலாது. தண்ணீரின் இரசாயனக் குறியீடு H^2O என்பது. அதாவது இரண்டுபங்கு நீர் வாயுவும், ஒரு பங்கு பிராண வாயுவும் சேர்ந்தால் தண்ணீர் உண்டாகிறது என்பது விஞ்ஞான விதி. இதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளக் கடப்பாடு உடையோம். இரசாயன கூடத்தில் சோதனை செய்தால் அன்றி இதை நாம் அனுபவமாக்கிக் கொள்ளமுடியாது. பலகோடி அண்டங்கள் வானவெளியில் மிதக்கின்றன. "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்பார் மணிவாசகர். இவற்றைக் கூர்த்த சோதனையால் பார்த்தால் அன்றி உண்மையறிந்து கூறமுடியாது. நெருப்பு சுடும்-இஃதொரு விதி. சுடுபட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. வான சாத்திரக் கண்டுபிடிப்புக்களை எல்லாம் வாய்மையாக நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனவே தொகுப்புமுறையினைவிட பகுப்புமுறையே நம்பத்தக்கது; நல்ல மார்க்கமும் ஆகும்.

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E. Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Biographies of Great Philosophers by Thomos &Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்

டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

(மலர் 47, இதழ் 10, பக்கம் 516 இன் தொடர்ச்சி.)

சைவம் சிவபெருமானைத் தலைவனாக ஏற்றுப் போற்றும் பெருநெறி. ஆனாலும் சைவம் கோயிலுக்குள்ளேயே ஒடுங்கிக்கிடக்கும்படி மக்களை ஒருகாலும் வற்புறுத்தியதே இல்லை. இறைவன் பெயரால் சிற்றுயிர்களிடம் அன்பும், மக்களிடம் நேயமும்கொண்டு வாழவேண்டும் என்று வற்புறுத்திய பெருமை அதற்குண்டு. மனித நேயமே சைவத்தின் தலையாய கொள்கை. மக்களை விட்டு விட்டு ஆராய, சைவத்தில் என்ன இருக்கின்றது என்று வினாத் தொடுத்தவர்கள் சைவ சமயக் குரவர்கள்.

திருமூலரின் திருமந்திரம் சைவ சமயக் கோட்பாட்டுக்கு ஒரு பாடலில் அழகாக விளக்கம் தருகின்றது.

"யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை"

என்ற தொடரால் சைவத்தில், வழிபாடுகள் மற்றும் சடங்குகள் என்பன ஒரு சிறுகூறு என்று விளக்கம் தருகிறார் அவர். ஒரு பச்சிலையைப் பறித்து, சிவலிங்கத்தின் திருமேனியின் மீது அன்போடு இடுவதோடு சமயம் சார்ந்த வழிபாடு நிறைவு பெறுகிறது.

திருமந்திரத்தின் இரண்டாவது வரி சைவம் சார்ந்த மக்களின் சமூகக் கடமை இன்னது என்பதை வற்புறுத்துகிறது.

"யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை"

சிற்றுயிர்கள் பசியால் வாடிக்கிடக்கையில் அவற்றின் துயர்நீக்கும் உயிரிரக்கம் என்பது சைவசமயம் காட்டும் உன்னதக்கோட்பாடுகளுள் ஒன்று. இவ் உயிரிரக்கமே பின்னர் ஜீவகாருண்யம் எனப் பேசப்பெற்றது. இத்தோடு சமய வாழ்வு முடிந்து விடவில்லை. மேலும் திருமூலர் தொடர்கிறார்.

"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி"

தன்னையொத்த மனிதன் பசித்துக் கிடக்கையில் அவன் காண உண்பான் சைவனாதல் ஒருகாலும் இல்லை. உனக்கு உணவு கிடைத்து உண்ணும் போது பசித்திருப்பான் ஒருவனுக்கு 'ஒரு பிடி அன்னம் இட்டு உண்' என்று மனித நேயத்தை மகத்தான கொள்கையாக வற்புறுத்துகிறது. யாருக்கு இடுவது? திரு நீறு பூசிய சைவனுக்கு மட்டும்தானா! இல்லை! யாராக இருந்தாலும் பசித்தவனுக்கு ஒரு பிடி அன்னம் இடு என்று மன விரிவோடு சைவம் எல்லையிட்டுக் காட்டுகின்றது.

'நேரவந்தவர் யாவராயினும்' என்றும்

'அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில்' என்றும் வரும் திருமுறைத் தொடர்கள் சைவம் விரிந்த மனித நேயம், இன்னர் இனியார் என்று பாராது அமைந்திருந்த பெருமிதத்தைப் பேசிக் காட்டுகின்றன. நிறைவாகத் திருமந்திரம்,

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

என்று தனி மனிதப் பண்பாட்டை வற்புறுத்துகின்றது.

சைவம், மனிதன் மனிதனிடம் காட்ட வேண்டிய அன்பு கலந்த பண்பாட்டையும் வற்புறுத்துகின்றது. 'இனிய உளவாக இன்னாத கூறும் இயல்புடையார்' சமயவாதிகள் என உரிமை கொண்டாடுவதைச் சைவம் ஏற்க மறுக்கின்றது. ஒன்று சேர்த்துப் பார்க்கும் போதில் சைவம் சார்ந்த சமயவாழ்வில் சடங்குகளுக்கு உரிய பங்கு நான்கில் ஒன்றாகவே அமைகின்றது.

சிற்றுயிர்கள்பால் காட்டும் உயிரிரக்கம், ஒரு கூறாக, மனித நேயம் ஒரு கூறாக மனிதப் பண்பாடு ஒரு கூறாகச் சைவம் என்ற உன்னத நெறி உருப்பெற்று உயர்கின்றது.

திருமூலர் காலம் அப்பரடிகளுக்குப் பிற்பட்டது என்பது அறிஞர் பலர் கண்ட முடிபு என்றால் சைவம் பற்றிய இவ் உயரியக் கோட்பாடு உருப் பெறுவதற்கே அப்பரடிகளின் வாழ்வும் வாக்குமே அடித்தளம் என்பது உறுதியாகின்றது.

நால்வகை நெறிகளுள் ஒன்று சரியை என்பது, திருக்கோயில் களுள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத் திருமேனிகளுக்குச் செய்யப் பெறும் புறப்பூசை முறைகளைச் சரியை என்பர். இந்நெறி நின்றவர் அப்பரடிகள் என்பது ஒரு பொதுவான மதிப்பீடு, திருவாரூர்த் திருத்தாண்டகத்துள்,

"நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா"

என அழைத்து அலகிடல், மெழுக்கிடல், பூமாலை புனைந்தியற்றல், புகழ்ந்துபாடல், தலையால் கும்பிடல், கூத்தாடல் என முதற்படியாய சமயச் சடங்குகளை விரித்துரைப்பர் அப்படிரகள்,

இரண்டாவதாகிய உயிரிரக்கம் அப்பரடிகள் சைவத்திற்கு வற்புறுத்தி வழங்கிய அருட்கொடைகளுள் ஒன்று. சங்க இலக்கியங் கள் தமிழர் வழிபாட்டு மரபுகளை ஆங்காங்குச் சுட்டிச் செல்லு கின்றன. வழிபாடுகளில் உயிர்ப்பலி பற்றிய சில குறிப்புக்களை ஆங்காங்கே காணமுடிகின்றது.

உயிரிரக்கம் என்ற உன்னதமான கோட்பாட்டைத் தமிழக மக்களுக்கு வற்புறுத்தி வழங்கிய மதங்கள் சமணமும், பவுத்தமும்.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உயிர்ப்பலிக்கு எதிராக முழக்கங்கள் இடுவதை அவற்றுள் காணலாம். வேள்விகளை உடன்பட்டு உயிர்ப்பலியை ஏற்ற வேத வழிப்பட்ட வைதீகச் சமயங்களுள் ஒன்றாகிய சைவம் அப்பரடிகள் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற்றது. அக்காலை உயிர்ப்பலியை முற்றாக வெறுத்து, எல்லா உயிர்களிடத்தும் அன்புசெலுத்தும் கருணையே சைவத்தின் மூலமான தருமநெறி என்று அப்பரடிகள் வற்புறுத்தி உரைத்தார். "தயா மூலதன்மம்"-என்ற அப்பரடிகளின் தொடர் 'கருணையே அடிப்படையான தர்மம்' என்ற பொருளைத்தருவது. சமணத்தை வெறுத்துச் சைவம் புகுந்த அப்பரடிகள் சமணர்களின் உயர்கோட்பாடாகிய உயிரிரக்கத்தைப் போற்றிச் சைவத்திற்குக் கொண்டுவந்தனர் என ஆராய்ச்சியாளர்கள் பலர் சான்றுகள் காட்டி விளக்குகின்றனர். திருமழபாடித் தேவாரத்துள்,

> " தனத்திருந்தும் அவர் திறத்தை ஒழியப்பாற்றித்
> தயாமூல தன்மவழி எனக்கு நல்கி "

என்றும், திருநள்ளாற்றுத் தேவாரத்துள், 'சிவபெருமான் தானே கருணை நெறி நின்று ஒழுகுவான்' என்பாராய்

> " சலங்கெடுத்து தயாமூலதன்மம் என்னும்
> தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
> நலங் கொடுக்கும் நம்பியை "

எனப் பதிவு செய்து காட்டுகின்றார்.

உயிர்க்கொலையும், புலைப்பொசிவும் இல்லாத உன்னத நெறியாகச் சைவம் உயர முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை அப்பரடிகளுக்கே சென்று சேர்கின்றது. தமக்குப் பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் விளைக்கக் காரணர்களாக இருந்த சமணர்களுக்கு யாதொரு துன்பத்தையும் விளைக்காத பண்பினையும் தம் தேவாரத்துள் அவர்களை இகழ்ந்துரைக்காத ஏற்றத்தையும் நோக்கும்போது 'தயாமூலதன்மம்' என்ற கருணைப் பெருநெறியைச் சைவத்திற்கு வற்புறுத்தியதோடமையாது தாமே அந்நெறி நின்று வாழ்ந்து காட்டிய அப்பரடிகளின் சான்றாண்மையையும் நம்மால் உணர்ந்து மகிழ முடிகின்றது.

அப்பரடிகள் திருஞானசம்பந்தரோடு இணைந்து தலயாத்திரை கொள்ளுகின்றார். திருவீழிமிழலையில் இருவரும் தங்கியிருக்கின்றனர். அக்காலை நாட்டில் கொடிய பஞ்சம் நிலவுகின்றது. மக்கள் பட்டினியால் சாம்புகின்றனர். கோயில் வழிபாடு என்று பயணம் தொடர்ந்து தம்மை ஏற்கும் செல்வர் இல்லங்களில் உணவு கொண்டு அப்பரடிகள் சென்றிருந்தால் உலகம் அவரைக் குறை கூறப் போவதில்லை. பஞ்சகாலத்தில் வறுமை நீக்கிப்பசித்தோருக்கு

உணவிட வேண்டிய கடமை அரசுக்கு உரியதே அன்றி ஆன்மீக வாதிகளுக்கு உரியது அன்று என அவர்கள் கூறியிருக்கலாம். ஆனால் பல நூறு பேர்கள் பசித்திருக்கத் தாம் மட்டும் உண்ணும் கீழ்மையை ஒருகாலும் நினையாத சமயத்தலைவர்கள் இறைவன் திருவருளை வேண்டிப் பணிந்தனர். 'மனமிருந்தால் மார்க்கமுண்டு' என்பர் முன்னோர். சிவபரம்பொருளே அப்பரடிகளின் உள்ளக் கிடக்கையை அறிந்து

"காலநிலைமையால் உங்கள் சருத்தில் வாட்டமுறீர் எனினும்
ஏலஉம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றோம்"

என்று குற்றமற்ற படிக்காசினை அப்பரடிகளுக்கு அளித்தருள் கின்றார். அதிலும் கைத்தொண்டு புரிந்த காரணத்திற்காக வாசி இல்லாக் காசு அவருக்கு வழங்கப் பெற்றதாகச் சேக்கிழார் குறிக் கின்றார். இக்காசு கொண்டு சோறு நாளும் தொண்டர் மகிழ்ந் துண்ண அப்பரடிகள் பஞ்ச காலத்தில் மக்கள் பசிபோக்கும் அரிய செயலைச் செய்து உயர்கின்றார்.

மக்கள் நலிவுற்றகாலை அவர் துயர்துடைக்க வாராத எந்தச் சமயமும் வாழ்வு பெற்றதாக வரலாறே இல்லை. சமயவாதியாகிய அப்பரடிகள் 'உண்ணும்போது ஒருகைப்பிடி' – என்ற சமயக் கோட்பாட்டுக்கு உயிர்தந்து சமூகவாதியாக உயரும் சிறப்பினைத் திருவீழிமிழலை நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

மனிதப்பண்பாடு என்பது சைவத்தின் உயிர்நாடிக் கொள்கை களில் தலையாய ஒன்று. வாழ்வையே சத்திய சோதனையாக ஆக்கிக் கொண்ட அப்பரடிகள், சமயம் சார்ந்த சமூகப் பண்பாட்டில் மலை விளக்காகச் சுடர்விடுகின்றார். நல்லமனம், நற்சொல், இனியசெயல் என்பன பண்பாட்டின் அடித்தளங்கள்.

அப்பூதி அடிகள் இல்லத்தில் அவரைச் சந்தித்த அப்பரடிகள் "நீர் வைத்த தண்ணீர்ப் பந்தலில் நும்பெயர் எழுதாது வேறு ஒருவர்பெயர் எழுதியது ஏன்?" என்று வினவுகின்றார். வந்திருப்பவர் தம் இதய தெய்வம் நாவரசர் தாம் என்பதை அறியாத அப்பூதி யடிகள் அன்பு மிகுதியால் சினந்து "எங்குறைவீர்? நீர்தாம் யார்?" என வினாக்களை அடுக்குகின்றார். நாவரசருக்கு அப்பூதி அடிகளின் சினத்திற்குப் பின் புலமான அன்பு தெரிகிறது.

"பிற துறையில் நின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்"

எனப் பண்பாடு கலந்த மென்மொழிகள் அப்பரடிகள் திருவாயி லிருந்து வெளிப்படுகின்றன.

அப்பரடிகளின் பண்பாடு நமக்கு மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இதேபோல் திருப்பூந்துருத்தியில் வாழ்ந்திருந்த அப்பரடிகளைக் காணவந்த திருஞானசம்பந்தர் ஊர் எல்லையில் "எங்குற்றீர் அப்பர்?" - என வினவுகின்றார். தம்மை நாடிவந்த ஞானசம்பந்தர் பல்லக்கை அவர் அறியாமல் தோளிலே தாங்கிவரும் அப்பரடிகள் கீழிருந்து,

"உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்குற்றேன்"

என மென்மொழி புகல்கின்றார். தாழ்வும், பணிவும், இன்சொல்லும் பண்பாட்டுக்கு அழகூட்டும் உயர்பண்புகள் என்பதை இந்நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தம் வாழ்வால் அஞ்சாமை, உயிரிரக்கம், மனித நேயம், பண்பாடு என்ற நால்நெறிகளை வகுத்தளித்த அப்பரடிகள் தம் வாக்கால் வழங்கியருளிய ஆன்மீகச் செல்வங்கள் அடுத்து நம் நெஞ்சில் நிழலாடுகின்றன.

நாவரசர் வருகை உன்னதமான ஒரு பெருநோக்குடையது என்பதை முதன் முதலில் இனங்கண்டு காட்டியவர் தெய்வ சேக்கிழார்,

"திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர்"

எனத் திருத்தொண்டின் நெறி வாழவந்தவர் அப்பரடிகள் என்பதனைப் புராணத்தின் முதற்பாடலிலேயே பதிவுசெய்து உணர்த்துகின்றார். கற்களையும், புற்களையும் அகற்றும் உழவாரம் என்ற உன்னதக் கருவியினைக் கையிலேந்தி உயர் தொண்டு புரிந்தவர் அப்பரடிகள். திருவையாற்றுத் தேவாரப்பனுவல் ஒன்றுள், "தொண்டலால் துணையுமில்லை" - என்று தொண்டே தம் வாழ்க்கைத்துணை என இனம் காட்டுகின்றார்.

தொண்டு என்பது இங்கே இறைவனுக்குச் செய்யும் தொண்டைத்தான் குறிக்கின்றது. ஆனால் இறைவன் பெயரால் செய்யப்படும் தொண்டின் பயன் மக்களையே சென்று அடைகின்றது. யார்ஒருவர் எந்த ஒரு தொண்டை எதன் பொருட்டுச் செய்தாலும் அதன் பயன் கடைசியாகச் சமுதாயத்தையே சென்றடையும் என்ற நியதி அறிந்த அப்பரடிகள் மக்கள் தொண்டாக இயற்றி மகிழ்ந்தார். கோயிலில் தொடங்கிய தொண்டு விரிவடைந்து சமூகத்தில் நிறைந்த திறத்தைச் சேக்கிழார் பல இடங்களில் பதிவுசெய்து காட்டுகின்றார்.

(தொடரும்)

கட்டுரை எண். 10.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

ஒருங்கு அழிவது உறுதி :

சிவஞானபோதத்தில், "பூதாதியீறும் முதலும் துணையாக......" என்னும் வெண்பாவில் கூறப்பெற்ற செய்தியான, "ஒருவகைப் பொருள் ஒரு காலத்தில் ஒருங்கு தோன்றி நிலைபெற்று ஒருங்கே அழிவடையப் பார்த்து, உலகும் அதுபோல எப்பொழுதாவது முற்றும் ஒடுங்கும் என உணர வேண்டாவா?" என்னும் கருத்தினை, அருள்நந்திசிவம் இனிவரும் விருத்தத்தால் விளக்குகின்றார்.

உலகில் ஒருபக்கம் ஒருகாலத்தில் அழியப் பிறிதொருபக்கம் அழியாது நிற்கும்; எனவே உலகம் முழுவதுமே ஒருங்கு அழியும் என்பது பொருந்தாது என்று சிலர் கூறுவர். அது தவறு. பூமியில் தோன்றுகின்ற வித்துக்கள் எல்லாம் கார்காலத்திலே முளைகளைத் தோற்றுவிக்கும் - அங்ஙனம் தோன்றியவை வேனிற்காலத்திலே ஒருங்கே அழியும். இது உலகிலுள்ள ஒரு பகுதியின் செயல்முறை. இத்தன்மையான உலகமும் தனக்குரிய காலம் வரும்பொழுது நிலைகுலைந்து ஒருங்கே அழிந்து போவது உறுதி என்றார்.

" ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்
பாரிடம் அழிவது இன்றும் என்றிடில் பயில்வித்தெல்லாம்
காரிடம் அதனில் காட்டும் அங்குரம் கழியும் வேனில்
சீருடைத் துலகு காலம் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும் "

என்னும்பாடலால் ஆசிரியர் மேற்காணும் கருத்துக்களை விளக்குவர்.

காலமும் கடவுளும் :

இதனைக் கேட்ட சிலர், அங்ஙனமாயின் அக்காலமே போதும். இதனைக் கொண்டு இயற்றும் நிமித்தகாரணனாகிய இறைவன் வேறு வேண்டாம் என்று கூறினர். இதனை, வழி நூல் ஆசிரியர் அழகுற மறுக்கின்றார், காலம் எல்லாவற்றையும் செய்வதற்குத்

துணையாக வேண்டப்படும் ஆயினும் அதுவே செய்துவிடாது. அது சடம் ஆதலால் அதனைத் துணைக்காரணமாகக் கொண்டு செய்விக்க இறைவனாகிய நிமித்தகாரணன் என்றும் வேண்டும் என்றார்.

" காலமே கடவுளாகக் கண்டனம் தொழிலுக்கு என்னில்
காலமோ அறிவின்றாகும் ஆயினும் காரியங்கள்
காலமே தரவே காண்டும் காரணன் விதியினுக்குக்
காலமும் கடவுள் ஏவலால் துணைக்காரணம் காண் "

என்னும் பாடலில் அக்கருத்து விளக்கப்பட்டுள்ளது.

முதற்காரணம் அணுவன்று :

இனி, உலகிற்கு முதற்காரணம் எது என்னும் கருத்து விளக்கப்படுகிறது. தார்க்கிகர் (அவர்களின் கருத்தின்படி) நித்தமாகிய அணுக்கள், கன்மம் காரணமாக உலகமாய்த் தோன்றி நின்று அழியும் எனக் கூறினர். அதனை ஆசிரியர் மறுக்கின்றார்.

அணுக்களும் கன்மமும் சடப்பொருள்கள் ஆதலாலும் உலகம் ஒடுங்கும பொழுது அவை இரண்டும் ஒடுங்கிவிடும் ஆதலாலும் அணுக்களே மீளவும் உலகமாய்த் தோன்றிநின்று அழியும் என்பது பொருந்தாது என்றார். இக்கருத்தினை,

" அழிந்தபின் அணுக்கள் தாமே அகிலமாய் வந்து நின்று
கழிந்திடும் கன்மத்து என்னில் கன்மமும் அணுவும் கூட
மொழிந்திடும் சடமே யாகி முடிதலால் முடியா செய்தி
ஒழிந்திடும் அணுருபங்கள் உலகெலாம் ஒடுங்கு மன்றே "

என்னும் பாடலின் மூலம் ஆசிரியர் விளக்குகின்றார்.

அடுத்த கேள்வி இதன் தொடர்பாக எழுந்தது. காரணமாகிய அணுக்கள் அழிந்திடும் எனில் அவற்றின் காரியமாகிய உலகமும் உடன் அழிந்துவிடும்; மீண்டும் எங்ஙனம் தோன்றும்? என்று கேட்டனர். உலகிற்கு முதற்காரணம் மாயை ஆதலின் அவ்வணுக்கள் அழியினும் காரியமாகிய இவ்வுலகம், மாயையினின்று மீளத் தோன்றும் என்று ஆசிரியர் கூறினர். உலகிற்கு முதற்காரணம் மாயை என்பது எங்ஙனம்? என்று கேட்டனர். அதற்கு ஆசிரியர், அணுக்கள் காரியத்தன்மை பெற்றிருத்தலால் அவற்றிற்கு முதற்காரணம் ஒன்று உண்டு என்பதும் இவ்வணுக்கள் முதற்காரணம் என்பது பொருந்தாது என்பதும் உணரலாம் என்றார். அம்முதற்காரணம் மாயையே என்றும் கூறினர்.

" காரண அணுக்கள் கெட்டால் காரிய உலகு இன்று என்னில்
காரண மாயை யாகக் காரியம் காண லாகும்
காரணம் மாயை என்ன? காண்பது இங்கு அணுவே என்னில்
காரணம் மாயையேகாண் காரியம் அணுவில் கண்டால் "

என்பதன் வழி இக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

மற்றும் ஒரு வினவை இதுதொடர்பாக எழுப்பினர். உலகிற்குக் காரணமாய பரமாணுக்களைக் காரியம் என்று சொல்லுவது எப்படி? என்று கேட்டனர். அதற்கு அருள்நந்திசிவம், குடம் முதலியவை போல அணுக்களும் அவயவம் உடைமையால் அறிந்தோம் என்றார். மேலும் உருவப்பொருள்கள் எல்லாம் காரியப் பொருள்கள் என்பதும் அவை அழிந்துபோகும் தன்மையன என்பதும் அவயவத் தன்மை யில்லாத மாயையே முதற்காரணமாக இருந்து இவ்வுலகத்தைத் தோற்றுவிக்க அமையும் என்பதும் உணரத்தக்க செய்திகளாகும் என்றும் கூறினர்.

இக்கருத்துக்கள் கீழ்வரும் பாடலின் மூலம் தெளிவிக்கப் படுகின்றன.

" காரியம் என்பது என்னை காரண அணுவை என்னில்
காரியம் அவயவத்தால் கண்டனம் கடாதி போலக்
காரிய உருவ மெல்லாம் அழிதரும் காரணத்தால்
காரிய உறுப்பின் மாயை தருமெனக் கருதிடாயே.

இருவகைப் பிரமாணங்கள் :

இனி, மாயையே உலகிற்கு முதற்காரணம் என்பதற்கு அளவை கூறுகின்றார் ஆசிரியர். உலகின் தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழில் என்பது அறிஞர் வாக்கு. வித்தானது இலை முதலியவைகளைச் சூக்கும ரூபமாகத் தரித்து நின்றது ; ஆதலின் அவை மீண்டும் தூல ரூபமாய் வெளிப்பட்டு நிற்கும் ; அவ்வாறு சூக்கும ரூபமாய் அடங்கி நிற்றல் இல்லாதாயின் தூலரூபமாயின் அவை வெளிப்படுதல் இல்லை என்பது (உடன்பாடும் எதிர்மறையும் ஆன) வழக்குச் சொல். அறிஞர் வாக்கு என்பது ஆகமப் பிரமாணம். வழக்குச் சொல் என்பது அனுமானப் பிரமாணம். வித்தில் இலை முதலியவை சூக்கும ரூபமாய் அடங்கி நிற்றல் போன்று மாயையில் உலகம் அடங்கி நிற்கிறது என்பதும் பின்னே இலை முதலியன தூல ரூபமாய்த் தோன்றி நிற்பது போல உலகமும் தோன்றுகிறது என்பதும் அனுமானப் பிரமாணம் ஆகும். இவ்வகையில் மாயையே உலகிற்கு முதற்காரணம் என்பது இருவகைப் பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்டது. இக்கருத்துக்களை,

" தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழிலதென்றே
சாற்றிடும் உலகம் வித்துச் சாகாதி அணுக்களாக
ஏற்றதேல் ஈண்டு நிற்கும் இல்லதேல் இயைவ தின்றும்
மாற்றம்நீ மறந்தாய் இத்தால் மாயையை மதித்திடாயே "

என்னும் பாடலால் விளக்கினர்.

ஒடுங்கித் தோன்றுவது எங்ஙனம் ?

இக்கருத்துத் தொடர்பாக மேலும் சில விளக்கங்களை ஆசிரியர் கூறுகின்றார்.

உள்ளது தோன்றும், இல்லது தோன்றாது என்னும் சற்காரிய முறைப்படி மாயையில் முன் சூக்கும ரூபமாய் ஒடுங்கியிருந்த உலகம் பின் தூல ரூபமாய் வெளிப்படுகிறது என்றார். இதனைக் கேட்ட ஒருவர் முன்பு சூக்குமரூபமாய் ஒடுங்காதிருந்து பின் உலகம் தூலரூபமாய்த் தோன்றுகிறது என்று கருதினல் குறை என்ன என்று வினவினர். அங்ஙனமாயின், முன்பு இல்லாதிருந்து, முயலினிடத்துக் கொம்பு பின்பு தோன்றுவதாகும் என்று மறுத்தார். பிறிதொருவர் சற்றுக் கேலியாகக் கேட்டார். "முதிர்ந்து உதிர்ந்த இலைகள் எல்லாம், அம்மரங்களில் ஒடுங்கி மீண்டும் இலைகளாகத் தோன்றினல் நீங்கள் கூறுவதுபோன்று மாயையில் ஒடுங்கிப் பின்பு அதிலிருந்து உலகம் வெளிப்படுகிறது எனலாம்" என்றார். இதற்குரிய விடையினை ஆசிரியர் அமைதியாகத் தருகின்றார். உதிர்ந்த இலைகள், சூக்குமரூப காரணமாய் நிலைபெற்றுப் பூமியில் ஒடுங்கி மீளவும் இலை முதலியனவாய் வருகின்றன. அதுபோலவே உலகமும் மாயையிலே ஒடுங்கி மீளவும் தோன்றுகிறது என உணர்வாயாக என்றார்.

" மாயை யினுள்ள வஞ்சம் வருவது போவ தாகும்
நீயது இங்கில்லை என்னின் நிகழ்ந்திடு முயலின் கோடு
போயுகும் இலைகளெல்லாம் மரங்களில் புக்குப் போதின்
ஆயிடும் அதுவும் என்னின் காரணம் கிடக்கலாமே "

என்பது அக்கருத்துக்கள் அமைந்த பாடலாம்.

உலகமும் ஒருவனும் :

இனி இரண்டு கருத்துக்கள் ஆசிரியரால் உறுதி செய்யப்படுகின்றன. ஒன்று, இந்த உலகமும் ஒருவாற்றான்நித்தப்பொருள்; பிறிதொன்று, இதனை இயற்றுதற்கு ஒரு கருத்தா வேண்டும் என்பன. காரியமாகிய உலகம் அதன் காரணமாகிய மாயையைப்போல உள்பொருளாயிருத்தலின் அது நித்தப் பொருளேயாம். தோன்றி ஒடுங்கும் வேறுபாடு பற்றி அது அநித்தம் என்று கூறப்படினும் உண்மையில் ஆராய்ந்தால் நித்தப்பொருளேயாம்.

இந்த உலகம், அறிவுள்ள ஒருவனல் செய்யப்படும் காரியமாயிருக்கிறது. புருடன், மாயை காரியமான தனுகரணங்களைப் பெற்ருல் அன்றி ஒன்றையும் அறியமாட்டான் ஆதலாலும், மாயை அறிவில்லாத சடப்பொருளாயிருத்தலாலும், அவ்விரண்டிற்கும் வேருய் இந்த உலகத்தைத் தோற்றுவித்து நிலைபெறுத்தி ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டும் என்ருர்.

இக்கருத்துக்கள் கீழ்வரும் இரு பாடல்களால் விளக்கப்படுகின்றன.

"கருது காரணமுண்டாகக் காரியம் உள்ள தாகி
வருதலால் அநாதி வையம் மற்ருெரு கடவுள் இத்தைத்
தருதலால் ஆதியாகச் சாற்றலும் ஆகும் மாயைக்(கு)
ஒருவன் ஆர் என் இங்கு என்னின் உள்ளவாறு உரைப்பக்
[கேள்நீ"

"புத்திமற் காரியத்தால் பூதாதி புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்ருல் அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனல் மாயைக்கு உணர்வொன்றும் இல்லைஎன்றே
வைத்திடும் அதனல் எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்"

இப்பாடல் கருத்துடன் போதத்திலும் சித்தியிலுமாக முதற் சூத்திரத்தின் முதல் அதிகரணக் கருத்துக்கள் முடிவடைகின்றன. இங்ஙனம், சிவஞானபோதம், இந்தப் பிரமாண இயலுக்கு ஏற்ப சுருங்கிய வாய்பாட்டால் பதி உண்மைக் கருத்துக்களை முதற் சூத்திரத்திலும் முதல் அதிகரணத்திலும் கூறவும், சித்தியார், போதத்திற்கு விளக்கம் தரவேண்டிய இடத்தில் விளக்கம் தந்தும் மேலும் இயைபுபட்ட கருத்துக்கள் அனைத்தையும் ஈண்டுத் தொடர்புபடுத்தி இயம்பியும் உள்ளமை எண்ணத்தக்கது. சிவஞான போதம், சூத்திரம் - 1 அதிகரண வெண்பா - 1 என அமைந்துள்ளது. சித்தியார், சூத்திரம் - 1 பின் விளக்கத்திற்குரிய விருத்தங்கள் 16 என அமைந்துள்ளது. சித்தியாரில் சூத்திரம் தவிர எஞ்சியுள்ள 16 விருத்தங்களில் ஒன்று நேரிடையாக போதத்தின் அதிகரண வெண்பாக் கருத்துக்களை விளக்கிக்கூற, எஞ்சிய 15ம் உலகாயதர், சௌத்திராந்திகர், மீமாஞ்சகர், தார்க்கிகர் என்னும் வாதிகளின் வினுக்களுக்கு விடை கூறுமுகமாவும் சில கருத்துக்களைத் தக்க எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குமுகமாகவும் அமைந்துள்ளன. இவைகுறித்து முன்பு ஆங்காங்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

(தொடரும்)

அவனிகந்தர்வ ஈசுவரகிரகம்

டாக்டர் திரு. இரா. கலைக்கோவன்,
பி. லிட்., எம். பி. பி. எஸ்., டி. ஓ.,

கட்டுரை எழுதத் துணை புரிந்தவர் :
செல்வி மு. நளினி, எம். ஏ., (வரலாறு)

(மலர் 47, இதழ் 10, பக்கம் 538 இன் தொடர்ச்சி.)

சந்திரசேகரர் கோட்டத்தின் மேல் உள்ள தோரணத்தில் சிவபெருமான் ஊர்த்வஜாது கரணத்தில் புன்னகை பொலியக் காட்சி தருகிறார். 17 செ. மீ. உயரமும், 19 செ. மீ. அகலமும் உள்ள வளைவுக்குள் ஆடல்வல்லானின் கரணக் காவியக்காட்சி அமைக்கப் பட்டுள்ளது. இந்த வளைவின் பக்கவாட்டில் மேற்புறம், ஆடலைக் கண்டு, ஆனந்தம் மிகக் கொண்டு, போற்றும் மெய்ப்பாட்டில், கைகளில் மலர்களுடன் கந்தருவர் இருவர், கீழே வலப்புறம் ஆடலைப் பார்த்துக்கொண்டே, குள்ளச்சிறு பூதமொன்று தாளங்கள் தட்டி மகிழ்ந்து நிற்கிறது. அதையடுத்து, இடக்கை குடமுழவை வாசிக்க, வலக்கை 'எத்தனை அற்புதமான தெய்வீக ஆடல்' என்று மனம் நினைப்பதை விரலசைவுகளால் காட்டும் நிலையில், நந்திகே சுவரரின் நயமான தோற்றம். வளைவுக்குள் வலப்புறம் இன்னொரு பூதம் புல்லாங்குழலை இசைத்தபடி சொக்கி நிற்கிறது. இடப் புறத்தில் வளைவுக்கு வெளியே இரண்டு கணங்கள். பார்வைகள் ஆடலின் மேல் பரவசநிலையில் கைகளோ இசைக்கருவிகளின் மேல் ஒன்று தாளம் கூட்டுகிறது. மற்றொன்று வீணை வாசிக்கிறது. பூரிப்பும் புன்சிரிப்புமாய் இசை கூட்டும் இந்தக்கணங்களின் மகிழ்வு மயக்கம், அந்த ஆடல் நாயகனின் குமிழ் சிரிப்பிலா? அல்லது அந்தப் பெருமானின் கரணக்கோலவைகளிலா?

நடுநாயகமாக இறைவனின் ஊர்த்வஜாது! இடக்கால் முழங்கால் அளவில் இலேசாய் மடங்கப் பாதம் பக்கவாட்டில் திரும்பித் தரையில் ஊன்றியுள்ளது. வலக்கால் உயர்த்தப்பட்ட முழங்காலும், கீழ்நோக்கிய விரல்களுடன் இடப்புறம் திரும்பிய பாதமுமாய் ஊர்த்வஜாதுவில் எட்டுக் கைகளில் வலப்புற முன்கை காக்கும் குறிப்பு காட்டுகிறது. வலப்புறப் பின் கைகளில் கீழிருந்து

மேலே முத்தலை ஈட்டி, குறுந்தடி, துடியிருக்க, இடப்புறப் பின் கைகளில்கீழிருந்து மேலாகத் தலையோடு, பாம்பு, தீயகல உள்ளன. இடமுன்கை அர்த்தரேசிதமாய் மேலே உயர்த்தப்பட்டுள்ளது. உடலின் வளைவுகளும், ஆடை முடிச்சுகளின் தொங்கல்களும் கரண வேகத்திற்கேற்பக் காட்டப்பட்டுள்ளன. சடாமகுடராய்ச், சிரித்த முகத்தினராய்க் கண்களில் கருணை சுடர்விடக் களிநடம் புரியும் இந்தக்கரணக் காவியரைக் கண்டாரே கண் பெற்ற பயன்பெற்றார்.

விமானத்தின் முதல்தளக் கொடுங்கைக்குமேல் யாளிவரிமானம் காணப்படுகிறது. இதற்குமேல் சாலையும், கர்ணகூடுகளுமாய் ஒரு நிலையும், கீர்த்தி முகக் கூடுகளுடன் கழுத்தும் அமைய, சாலைக்கும் கீர்த்தி முக நிலைக்கும் இடையில் ஒரு யாளி வரிமானம் அழகூட்ட, சிகரம் நாகரமாய்க் கட்டப்பட்டுள்ளது. வடவாயில் போல் அல்லாமல், இங்கு ஒவ்வொரு சாலையிலும் இரண்டு மாடங்கள் இருப்பதால், அவற்றில் இரண்டு, கழுத்துப்பகுதி மாடத்தில் ஒன்று எனப் பக்கத்திற்குமூன்று தெய்வத்திருமேனிகள் நாற்புறங்களிலும் உள்ளன. மேற்குப் புறத்தில் மட்டும் சாலையின் கீழ்மாடத் தெய்வம், உள்மண்டபக் கூரைச்சுவர் சற்று உயர்த்திக் கட்டப்பட்டதால் மறைந்துள்ளது.

வடபுறச் சாலை மாடங்களில், கீழே உள்ள வடிவம் சிவபெருமானைச் குறிக்கிற தென்றாலும் சற்றுப் புதுமையாக உள்ளது. இடக் காலைக் குத்துக்காலிட்டு, வலக்காலைத் தாமரையிருப்புக் வைத்துள்ள இவரின் வல முன்கையில் கருவியில்லை. இட முன கை ஆகூய வரதமாய் முழங்காலின் மேல் வைக்கப் பட்டுள்ளது. இடப் பின் கையில் அக்கமாலை உள்ளது. வலப் பின்கை மேலே உயர்ந்து முதுகுப்புறமாய் உள்ள ஒரு பொருளைத் தொட்ட நிலையில் காட்டப் பட்டுள்ளது. இந்தக் கருவி சாமரமாக இருக்கலாம். இரண்டாவது சாலை வடிவும் புதுமையான தொரு கோலத்தில் அமர்ந்துள்ளது. இந்த அமர்வுகளுக்குச் சிற்ப நூல்களில் பெயர்களைக் காணோம்! இவ்வடிவத்தின் வலக்கால் மகிழ்விருப்புக் கோல வலக்கால் போலமைய, இடப்பக்கால் ஊர்த்வ ஜாநு போலக் காட்டப் பட்டுள்ளது. இதன் வல முன் கை மார்பில் ஆகூயமாய் அமைய, இட முன் கை உயர்த்தப்பட்ட இடமுழங்காலை யொட்டிப் பக்க வாட்டில் தொங்கும் கரமாய் உள்ளது. பின் கைகளில் முத்தலை ஈட்டியும் சாமரமும் காட்டப்பட்டுள்ளன. கழுத்துப்புற மாடத்தில் பிச்சையுகக்கும் பெருமான் இடப்புறம் பூத கணத்துடன் நின்ற கோலத்தில் இவரது பின் கைகளில் ஒன்று மானுக்குப் புல்தர, மற்றொன்றில் உவரிஉள்ளது. முன் கைகளில் வலப்புறம் தலையோடு; இடப்புறம் பாம்பு.

கிழக்குப் புறச் சாலை மாடங்களில் கீழ் மாடத்தில் தெய்வத் திருமேனி இல்லை. இரண்டாவது மாடத்தில் இருக்கும் வடிவம் சிதைந்துள்ளது. கழுத்துப்புற மாடத்தில் முருகன் முன் கைகளைக் காக்கும் குறிப்பிலும் கட்ய வலம்பிதத்திலும் கொண்டு, பின் கைகளில் சக்தியும் வஜ்ரமும் ஏந்தியவராய்க் காட்சி தருகிறார்.

தென்புறச் சாலை வடிவங்கள் இரண்டுமே மகிழ்விருப்புக் கோலத்தில் உள்ள சிவபெருமானைக் குறிக்கின்றன. கீழ்வடிவம் வல முன் கையில் காக்கும் குறிப்புக்காட்டி இட முன் கையை முழங்காலின் மேல் வைத்துள்ளது. பின்கைகளில் வஜ்ரமும், தலையோடும் உள்ளன. கழுத்துப்புற மாடத்தில் சந்திரசேகரர் நின்ற கோலத்தில் அழகே உருவாய்க் காட்சியளிக்கிறார். இந்தச் சிற்பத்தின் முக அழகு சொற்களில் சிறைப்பிடிக்க முடியாத சுந்தரப் பேரழகு. வல முன் கை சின்முத்திரையில்! இட முன் கை ஏடு ஏந்திய குறிப்பில், பின் கைகளில் வலப்புறம் பரசு; இடப்புறம் அக்க மாலை.

மேற்குப் புறக் கழுத்து நிலை மாடத்தில் வீணையேந்திய வித்தகராய்ச் சிவபெருமான். விமான தேவதைகளிலேயே அழகும் கம்பீரமுமாய்க் காட்சியளிக்கும் வடிவங்கள் சந்திரசேகரும் இவரும்தான். இடக்கால் நேராய் ஊன்றியிருக்க, வலக்காலை முழங்காலளவில் இலேசாய்மடக்கி, வலப்பாதத்தை உத்கட்டிதமாய் அமைத்து, ஆணழகராய்,இசைமேதையாய்ப்,பெருமிதப்பேரருளாய் நிற்கிறார் இறைவன். முன்கைகளில் வீணை, அதனைப் பின்புறக்குடம் இடத்தோளின் மீது பொருந்த, இரு கை விரல்களும் வீணையை மீட்ட, எழும் பேரின்ப நாதத்தில் தன்னையே இழந்து, தன் நிலை மறந்தவராய், இலேசாய் மூடிய விழிகளும், இளநகை பொலிந்த இதழ்களுமாய் இறைவன் நிற்கும் தோற்றம் காண இருவிழி போதா! பழுவூர்ச் சிற்பிகளின் நிறைவான கலைநயத்தைக் குறைவறக் கொண்டிருக்கும் எழிலுறை காவியம் இது.

இக்கோயிலில் இருந்து மைய அரசின் கல்வெட்டுத்துறை முப்பத்து மூன்று கல்வெட்டுகளைப் படியெடுத்து, சிலவற்றை முழுமையாகவும், சிலவற்றின் திரண்ட கருத்து மட்டுமெனப் பதிப்பித்துள்ளது. முழுமையான செய்தியுடன் பதிப்பிக்கப் பட்டவை - 16; திரண்டகருத்து மட்டும் பதிப்பிக்கப்பட்டவை – 17. இக்கல்வெட்டுகளை முழுமையாகப் படித்து, அனைத்துச் செய்திகளையும் வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணத்தில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை இக்கோயிலில் ஆய்வு மேற்கொண்டதில், இந்த முப்பத்து மூன்று கல்வெட்டுகள் தவிர, மைய அரசினரால் இதுவரை படியெடுக்கப்படாத இரண்டு

முழுமையான கல்வெட்டுகளையும், மூன்று துண்டுக் கல்வெட்டுகளையும் கண்டுபிடித்தது. இந்த ஐந்தனுள் ஒரு கல்வெட்டு மதுரை கொண்ட பரகேசரியினுடையது. இது தென்வாயில் ஸ்ரீ கோயிலின் உள்மண்டப வடசுவரிலிருந்து படியெடுக்கப்பட்டது. மற்றொன்று பலிபீடத்திலிருக்கும் கல்வெட்டு. துண்டுக் கல்வெட்டுகள் மூன்றும் தென்வாயில் ஸ்ரீ கோயில் கருவறையின் தெற்கு, கிழக்குச் சுவர்களிலிருந்து படியெடுக்கப்பட்டன. இவை ஒரே செய்தியைத் தருவதுடன், ஏற்கனவே படியெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டுடன் தொடர்புடையனவாக உள்ளமையால், சிலவற்றை அக்கல்வெட்டுடன் இணைத்த நிலையில், இங்குள்ள கல்வெட்டுகளின் எண்ணிக்கை, புதிய கண்டுபிடிப்புகளுடன் சேர்த்து முப்பத்தைந்தாக உயர்கிறது.

மைய அரசு படியெடுத்த கல்வெட்டுகள் - 33. டாக்டர் மா. இராசமாணிக்கனர் வரலாற்றுப் பேரவையால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் – 2.

இக்கல்வெட்டுச் செய்திகளால் அவனிகந்தர்வ ஈசுவரகிரகம் பற்றிய பலசெய்திகளும், பழுவூர் மன்னர்களைப் பற்றியவரலாற்றுக் குறிப்புகளும், சோழப் பெருவேந்தர்களின் பட்டியலும், பழுவூரில் வாழ்ந்திருந்த சமுதாயம் பற்றிய கண்ணோட்டமும் கிடைக்கின்றன. இங்குள்ள, முதலாம் ஆதித்தனின் மூன்று கல்வெட்டுகள், சிறப்புக்குரிய சிக்கலைக் கோயில்களை எழுப்பிய வேந்தர்களை அடையாளம் காட்டுகின்றன. அவனிகந்தர்வ ஈசுவரகிரகத்தில் காணப்படும் கல்வெட்டுகளுள் காலத்தால் பழமையான இவை, பழுவேட்டரைய மரபின் முதல்வர்களாகச் சுட்டும் குமரன் மறவனும் குமரன் கண்டனுமே இப்பழுவூர்ப் புதையல்களின் ஆதார சுருதிகள். குமரன் என்னும் தந்தைக்குப் பிறந்த இவ்விருவரும் தான் பழுவூர் அரியணையை ஆதித்தன் காலத்திலுப், பராந்தகன் காலத்திலும் தொடர்ந்து அலங்கரித்தனர். ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலுமாய் இவ்விரு வேந்தர்களால் எழுதப்பட்ட இக்கலைநிகழ் வளாகம் கருத்துள்ளவர்கள் கடைக்கண் காட்டினால், காலம் உள்ளளவும் பழுவூர் மரபின் புகழ் பாடிப் பொலியுமென்பதில் ஐயமில்லை.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு விபவ - ஆவணி 23 ஆம் நாள் 8--9--88 வியாழனன்று தேவாரவைப்புத் தலமாகிய சிவப்பள்ளியில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. சிவப்பள்ளி ஆலயம் சிதைவுற்றதால் அங்கிருந்த ஸ்ரீ கைலாசநாதரையும் ஸ்ரீ பார்வதிதேவியையும் குமரக்கோயிலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர். ஸ்ரீ சண்முக சுப்பிரமணிய சுவாமிக்கு முன்புள்ள மகாமண்டபத்தில் இருபுறங்களிலும் சுவாமி அம்பாள் சோமாஸ்கந்த வடிவில் அமையுமாறு உள்ளது. திருச்சிவப்பள்ளி திருநாவுக்கரசர் அடைவுத் திருத்தாண்டகத்தில் இடம் பெற்ற தலம். இத்தலத்தின் சிறப்புக்கள் பற்றி வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ. உரையாற்றினர். சிவப்பள்ளி. செம்பங்குடி, நாகேச்சரம், கொண்டல், நெய்தல்வாயில் தலச்சிறப்புக்களும் தேவாரமும் என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிறுதோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 88 ஆம் அருளுபதேசம் 2—10—88 அன்று திருமுறைப்பாராயணத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. முதலில் வித்யாவாசஸ்பதி, ஆனந்ததாண்டவபுரம் பிரம்மஸ்ரீ. இராமதாச ஐயர் அம்பிகை அருள் அநுபவமாதல்பற்றியும் மகாளய அமாவாசைபற்றியும் சுருக்கமாக உரைநிகழ்த்தினர்.

திருமுறை, சாத்திரம், புராணம், இலக்கியம் முதலியவற்றிலிருந்து மேற்கோள் காட்டித் தத்துவச்செறிவோடு தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பெரியபுராண விரிவுரை அருள்கின்றார்கள். இம்மாதம் சிறுத்தொண்டர் புராணப்பகுதியை விளக்கினார்கள். இறைவன்கொண்ட வயிரவக்கோலத்தின் சிறப்பை அருளினார்கள்; உச்சிமேரவாது கறிக்கு ஆக்கியமை, 'தனிபுகுதோம்' என்ற

ஆட்சியின் சிறப்பு முதலியவைகளைப் பற்றி நயந்தோன்றப் புலப் படுத்தினர்கள். தருமை ஆதீன அடியவர்கள், அன்பர்கள், ஆசிரியர் கள் முதலியோர் அருளுபதேசம் கேட்டுப்பயன்பெற்றனர்.

அடுத்து 89 ஆம் அருளுபதேசம் 6—11—88 அன்று நடை பெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக.

ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜைவிழா ஆவணி உத்தரநாள் கூடிய 12—9—88 திங்களன்று தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி இருவேளைகளிலும் வழிபாடு ஆற்றினர்கள். மாலை 7 மணியளவில் தருமையில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., ஸ்ரீ மறைஞானசம்பந்தர் அருள்வரலாறுபற்றி உரை யாற்றினர்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப்பண்ணிசை நிகழ்த்தினர். கவித்தென்றல் பிரம்மஸ்ரீ உ. ர. உமாநாததீட்சிதர் தலைமை தாங்கினர். வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., ஸ்ரீ மறைஞானசம்பந்தர் அருள்வரலாற்றுபற்றி உரையாற்றினர். தருமையிலும், சிதம்பரத்திலும் அன்பர்கள் விழாவிற் கலந்து கொண்டு தரிசித்தும் சொற்பொழிவு கேட்டும் பயனடைந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் 4 ஆவது குருமூர்த்திகளாய் எழுந்தருளி 17 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அருட்செங்கோல ஓச்சிய வர்களும் ஸ்ரீ குமரகுருபரர், ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் முதலியோர் களுக்கு ஞான உபதேசம் அருளியவர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா புரட்டாசி - சுக்லபட்சம் - ஏகாதசிகூடிய 21—9—88 புதன்கிழமையன்று தருமபுரம் திருமஞ்சன வீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் 'கயிலை மாமுனிவர்' ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

திருவியுள்ள அறக்கட்டளைச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனை களும் திருமுறைப் பாராயணமும் மாகேசுவர பூசையும் நடை பெற்றன.

காலை, மாலை இருவேளைகளிலும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குக் குருவருட் பிரசாதம் வழங்கினர்கள். காலை 10-00 மணி அளவில் ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவு விழாச் சொற்பொழிவு கள் நடைபெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரைவழங்கினர்கள். டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, வித்துவான் திருமதி ப. நீலா, எம். ஏ., எம். ஃபில், டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., ஆகியோர் குமரகுருபரர் இலக்கியங்கள் பற்றி உரையாற்றினர். பகல் 1 மணிக்கு மாகேசுவரபூசை நிகழ்ந்தது.

மாலை 6-30 மணியளவில் திரு. எஸ். நடராஜ குருக்கள், திரு. கணேச தேசிகர் ஆகியோர் திருமுறைப் பண்ணிசை நிகழ்த்தினர். தருமை ஆதீனப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., தலைமையில் 'குமரகுருபரர் பிரபந்தத்தில் விஞ்சி நிற்பது பக்திச் செறிவா? தமிழ் உணர்வா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடை பெற்றது. டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி தலைமையில், திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., திரு. இரா. செல்வநாயகம், எம். ஏ., ஆகியோர் பக்திச்செறிவே என வாதிட்டனர். திரு. சாமி. கிருஷ்ண மூர்த்தி, எம். ஏ., தலைமையில் திரு. தெ. இராசாமணி, எம். ஏ., திரு. ஆ. செந்தில்நாதன் எம். ஏ., ஆகியோர் 'தமிழ் உணர்வே' என வாதிட்டனர். தலைவர் குருபரர் இலக்கியங்களில் பக்திச் செறிவு நிறைந்து விளங்குதலை எடுத்துக்கூறித் தீர்ப்பு வழங்கினர். இரவு வழிபாடு நடைபெற்றது. 'தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை' (தெளிவுரையுடன்) என்ற நூல் வெளியிடப்பெற்றது. அன்பர்கள் கலந்துகொண்டு குருவழிபாடு ஆற்றிப்பயன்பெற்றனர்.

ஆதீனத் திருக்கோயில்களில் நிறைபணி விழா

புரட்டாசிப் பௌர்ணமியன்று இறைவனுக்குச் சிறப்பு முறை யில் நிகழ்த்தப்பெறும் வழிபாடு நிறைபணிவிழா. சந்நிதியில் மலர்ப்பந்தல் அமைத்து, இளநீர், காய், கனி முதலியவற்றைத் தொங்கவிட்டு அழகுபெறச் செய்தும், இறைவனுக்கு அபிஷேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்தும் கொண்டாடப்பெறுவது. "இந்நாளில் திருமால் இறைவனைப் பூசித்து அருள்பெற்றார்; திருமாலின் ஆணைப்படி தேவர்கள் இறைவனைப் பூசித்தனர்".

எனச் சிவவாக்கியம் கூறுகிறது. தருமை ஆதீனம் திருக்கோயில் களிலும், தருமை ஆதீன அருளாட்சியில் விளங்கும் சீகாழி, வைத்தீசுவரன்கோயில், திருக்கடவூர், திருபுவனம் திருக்கோயில் களிலும் இவ்விழா 25—9—88 ஞாயிறன்று மிகச்சிறப்பாக நடை பெற்றது. பக்தர்கள் இறைவனை வழிபட்டு இன்புற்றனர்.

திருச்சிற்றம்பலத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளுகை

சீர்காழிவட்டம் அரசூரை அடுத்த திருச்சிற்றம்பலம் கிராமத்தில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு. சித்திவிநாயகர், காத்தவராய சுவாமி, மகாமாரியம்மன் திருக்கோயில்களின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 14—9—88 புதன்கிழமைகாலை 10-00 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி, மகாபூரணாகுதி வழி பாடாற்றிக் கும்பாபிஷேகத்தை முன்னிருந்து சிறப்பாக நடத்துவித் தருளினார்கள். மகாபிஷேக தரிசனம் செய்து, நினைவுக்கல்வெட்டினை யும் திறந்து வைத்தார்கள்.

ஊர்மக்கள் சார்பில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி வரவேற்புரையாற்றினார். திரு. மு. சோமசுந்தரம் வரவேற்பிதழ் படித்தளித்தார். (வரவேற்பிதழ் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது) திருப்பணிச்செல்வர் திரு. சு. விசுவலிங்கம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார். தருமைக் குருமணி அவர்கள் டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி எழுதிய 'மகா மாரியம்மன் அருள் வரலாறு' (மாரியம்மன் தாலாட்டுடன்) என்ற நூலை வெளியிட்டு அன்பர்களிடையே அருளாசி உரை வழங்கி யருளினார்கள். சாதி பேதமில்லாது இணக்கமாக வாழ்ந்து வரும் திருச்சிற்றம்பலம் கிராமவாசிகளைப் பாராட்டி, உலகியல் உண்மை களையும், திருவருள் சிறப்பினையும் விரித்துரைத்தார்கள். கும்பா பிஷேகத்தில் பங்கேற்ற அன்பர்களுக்குப் பட்டாடைகள் போர்த்தித் திருவருட்பிரசாதம் வழங்கினார்கள். இருபதிற்கும் மேலான கிராம அமைப்பினைச் சார்ந்தவர்கள் குருமணி அவர்களுக்கு மாலை அணிவித்து ஆசிபெற்றார்கள். சீர்காழி மற்றும் சுற்றுப்புறக் கிராமங் களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் விழாவில் பங்கேற்றுத் திருவருளும் குருவருளும் பெற்று மகிழ்ந்தனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹு ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)
(17—10—88 முதல் 15—11—88 முடிய)

விபவஹு ஐப்பசி மாதம் 1உ சோமவாரம் பூராட நக்ஷத்திரம் கரசை சரணம் கூடிய காலத்தில் சூரியோதயம் முதல் 10 நாழிகை 46 விநாடிக்கு, தனுர்லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரியபகவான் கன்னியா ராசியிலிருந்து துலா ராசி சங்கிரமணமாக ஐப்பசி மாதம் பிரவேசம் செய்தருளுகின்றார். இரஸாதிபதி சந்திரபகவான் ஆகிறார். அன்று துலா விஷு புண்ணியகாலம். பிரஜைகள் அனைவரும் மாதம் பூராவும் பிராதகாலத்தில், ஓடும் நீர், சுனை, தடாகம் இவைகளில் ஒன்றில் துலாஸ்நானம் செய்து தூய்மை செய்து கொண்டு தேவாலயத்தில் இறைவனை வழிபடுதல் வேண்டும். இதிகப்படி புண்ணிய ஸ்தலத்தில் கங்கை காவிரிநதியில் துலாஸ்நானம் செய்ய முன் ஜன்மத்திய பாவங்களும் நீங்கும். நல் இடம் சேர்தல் ஆகும். ஆசான்கள் குருமகான்களின் ஆசி கிட்டும். மாந்தர்கள் நோய் நலிவின்றி ஆரோக்கியத்தில் இலட்சுமிகரமாக நல்லாக்கம் பெற இறைவன் அனுக்கிரகம் ஆகும். சங்கிரமணகால கிரகஸ்திதியினால் நாடுகளில் கல்விக் கூடங்களில் மாணாக்கர்களுக்குப் புதிய முறை கல்விப் போதனை, தொழிற்பயிற்சி கலை மேம்பாட்டில் நடைபெற்று வரும். பிரஜைகளின் அறியாமை போக்கித் தவிர்க்க நீதியாளர்கள் அறவுரை பகர்வார்கள். நாடுகளில் எங்கும் ஆன்றோர்களின் சீரிய நெறியில் தேவாலய தெய்வப்பணிகள், தர்ம ஸ்தாபனங்களில் நல்வழி தர்மங்கள், ஜனரட்சகப்பொதுநலப்பணிகள் இனிது நடந்து வரும். உலகெங்கும் உள்ள திருமடத்தில் ஆசாரிய பீடங்களில் பரமாசாரியசுவாமிகளாக வந்து சிவராஜ யோகத்தில் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகில் அறம்நீடிக்கவும் செங்கோல் ஆட்சி உயரவும் ஈஸ்வரதியானம் செய்து சிவநேயச் செல்வர்களுக்கும் ராஜ பிரமுகர்களுக்கும் அருள்பிரசாதம் வழங்கியருள்வார்கள். சிவாலயங்களில் பக்தியொடு நித்தியம் ஆறுகாலபூசைகள், விசேஷ பூசனைகள் நடந்து வரும். மக்கள் அனைவரும் ஈஸ்வர பக்தி மேலிட்டுத் தூய வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் மதிப்பாக வரும். அக்டோபர் 23 ,24 இல் அவசியமான தொன்றில் பெரும்தொகை முதலீடுசெய்ய நேரும். நவம்பர் 6தேதி ஆனால் தேக்சமாக இருந்தவை பூர்த்தியடைதல் ஆகிய நல்லன ஏற்படும். வித்துவத்துவம், கலைத்துறையில் ஆய்வுகளில் பிரகாச சிந்தையை உண்டுபண்ணும். தெய்வதரிசனம், நல்லவர் பிரபலஸ்தர் சந்திப்பு, நற்சம்பங்கள் ஏற்படுதல்ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வந்து நிறையும். வித்துவத்துவம், கலைத் துறையில் அரசாங்கத் தொடர்பு விஷயங்களில் அக்டோபர் 30தேதி சென்றால் நன்மைகளை உண்டுபண்ணும். புத்திரர்களுக்குக் கல்வி, கலைகளில் உத்தியோகத்தில் உயர்வளிக்கும். எல்லாக் காரியங் களையும் செவ்வையாக நடத்த அனுகூலம் ஏற்படுத்தி வரும். அக்டோபர் 17, 18 நவம்பர் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். பொதுநலமான செயல்கள் தர்மங்களில் அதிக ஈடுபாடும் தாராள சிந்தையும் ஏற்படும். முன்பு விட்டிருந்தது ஒன்றில் அரசு அனுகூலம் ஏற்படும். தெய்வ ஸ்தலம் செல்லுதல், நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, குருமார்களிடம் ஆசிபெறுதல் ஆகும். எல்லாக் காரியங்களையும் கெடியாக நடத்தும். தாரபுத்திரர் களின் நலம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கௌரவத்திற்கு ஏற்ப வந்து சேரும். வைரம், மரகதமணி பூஷணம் அளிக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் அக்டோபர் 31 இல் அரசகண்ய செய்திகள் வரும். அடுத்து 7 இல் வியாஜ்ஜியத்தில் ஜெயம், ரோக நிவர்த்தி ஆகும். சமூகத்தில் புகழ், போற்றுதல்கள் ஏற்படுவதாகும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் சில மேம்பாட்டில் நடந்து வரும். அக்டோபர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம், செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் பெருமதிப்பில் வரும். வித்துவத்துவம், கலைத்துறையில் புத்திமேம்பாட்டுச் செயல்முறைகளில் புகழும் மேலிடத்திய அனுகூலமும் ஏற்படச் செய்யும். பூஷணங்களின் பிராப்தி, ஓர் நவீன பொருள் பிராப்தியளிக்கும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கிய பலனையளிக்கும். இல்லத்தில் சுபமும் மகிழ்ச்சியும் நிலவும். அக்டோபர் 23,24 தேதிகள்சந்திராஷ்டம். வியாழன்,வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வரும். சுபவிஷய படாடோபச் செலவினமும் இருந்து வரும். வித்துவத்துவம், கலைத்துறையில் உத்தியோகத்தில் அக்டோபர் 30 தேதி சென்றால் அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வரும். எல்லாவற்றிலும் இக்கட்டான நிலைமையாகத் தோன்றினும் குருவீட்சணியத்தால் நற்பல பிராப்தியாகவே ஆகும். சகோதரி அல்லது ஸ்திரி வழி நன்மைகளை உண்டுபண்ணும். ஓர் நூதன பொருள் தரும். அக்டோபர் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். சுப விசேஷமாகச் செலவினங்களும் ஏற்படும். பரோபகார நற்பணிகளை ஏற்று நடத்தும். வீடு வாகனபிராப்தியில் நவம்பர் 5 தேதிக்குப் பிறகு பெரும் முதலீடும் நல்லன ஏற்படுதலும் ஆகும். வழக்கு விவகாரங்களில் ஜெய பிராப்தியாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் நல்லன ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஓர் நவீன பொருள் பிராப்தியளிக்கும். புண்ணிய தீர்த்தப் பலன் கிடைக்கும். சாஸ்திர சம்பிரதாயத்தில் செயல்களும் சிஷ்யர்களுக்கு நெறிமுறை போதனையும் செய்துவரும். ஏழரையோன் பொங்குசனியாக இருப்பின் நல்ல ராஜயோகம் தரும். தாரப்புத்திரர்களுக்கு நல்ல சௌகரியம் தரும். அக்டோபர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் இரண்டு வகையில் வருவதாகும். வித்துவத்துவம், கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் மறைமுகச்சத்துரு இருப்பினும் அதற்குப் பங்கம் ஏற்படும். மனோபலம் தரும். உயர்ந்தோர், அரசாங்கம் மூலமாக நன்மைகள் ஏற்படச் செய்யும். சனி பகவானுக்குத் திலதீபம் ஏற்றுதல் நலம். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம், கலைத்துறையில் அக்டோபர் 31 தேதி அளவில் நல்ல பிரயோஜனம் தரும். அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வருதலும் கிரியைகளில் பிரக்கியாதி ஏற்படுதலும் ஆகும். எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளிலும் வெற்றியைத் தரும். புத்திரர் புத்திரிகளுக்கு நலன்கள் பல உண்டாகும். மகிழ்ச்சியளிக்கும். தாம்பத்திய வாழ்வில் அமைதி நிலவும். நவம்பர் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். விஷய அவசரவார்த்தை பிரயோகம் செய்யும். ஸ்தாபனக்கிளைகள் ஏற்படுத்துதலில் முயற்சிமிகும். நவம்பர் 7தேதி ஆனால் எல்லாவற்றிலும் நன்மைகளை ஏற்படுத்திவரும். இயந்திர சாதனங்களில் நற்பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர்களுக்குச் சுகமும் அரசுநன்மைகளும் ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் கிலேசம் நீங்கி அமைதி தரும். நவம்பர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் மேன்மை ஸ்திதியாகும். அக்டோபர் 31 தேதிக்கு மேல் அரசு விதிதங்களால் நல்ல பிரயோஜனம் வரும். நவீன பொருள் பிராப்தியளிக்கும். புத்திரர் பௌத்திரர்களினால் மகிழ்ச்சி நிலவும். மனைவிக்குக் கண்களில் நலிவு தோன்றினும் உடன் வைத்தியத்தால் குணமாகும். எல்லாச் செயல்களும் மனோலயப்படி நடத்தத் தயக்கமுறினும் பெருமையால் நீடித்த பயனில் ஆவதாகும். நவம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

பண்டார சாத்திரங்கள் :

"வர்ணாச்சரம சந்திரிகா"

திரு. V. கணேசன்

(மலர் 47, இதழ் 10, பக்கம் 560 இன் தொடர்ச்சி.)

சித்தாந்த சாராவளியில், தீட்சை, ஆன்மசுத்தி நிலைகுறித்துச் செய்யப்படுவது என்பதை,

" ந ஜாதேர் ந சரீரஸ்ய ஸம்ஸ்கார: ப்ராணிநோமத: 1"

என்றும், காலோத்தரத்தில்,

" ந சரீரஸ்ய ஸம்ஸ்காரோ ந ஜாதேர் ந சகர்மண: 1
ஆத்மன: காரயேத்தீக்ஷாம் அநாதிமலகுண்ட நீம் 1
நிரோதஸ்தஸ்ய கர்த்தவ்யோ மந்த்ரைச்ச விஷசக்திவத் 11"

இவ்வாறும் கூறப்பட்டுள்ளது. மேலும் சுப்ரபேத ஆகமத்தில்,

" சாதுர்வர்ண்யாநி சார்யாநி சிவயோகேது தீக்ஷயேத் 1
அநுலோமான் ப்ரதிலோமாத் ஸிக்ஞாத்வா தீக்ஷயோத்குரு:11"

நான்கு வருணத்தாருக்கும், மற்றும் அந்நியருக்கும் சிவனிடத்தில் பக்தியோகம் இருக்குமேயாகில் தீக்ஷை செய்யலாம் எனவும், அநுலோமரையும், ப்ரதிலோமரையும் நன்கு உணர்ந்து குருவானவர் தீக்ஷைசெய்யவேண்டும் எனவும் கூறப்படுகிறது. அதனால் தான் ஏழுவித சைவர்களுக்குள் அந்த்திய சைவர்களாக இருப்பினும் தீட்சா சம்ஸ்காரத்தில் உரிமை உண்டு எனவும் தெரியப்படுத்துகிறது. ஏழுவித சைவர்கள் என்பது பற்றி வீரதந்திரத்தில் பாதபடுத்திக் கூறப்பட்டுள்ளது.

" சைவாஸ்ஸப்தவிதாக்ஞேயா: தேஷாம் பேதம் ஸ்துணஷ்வச:1
அனாதி சைவ: ப்ரதம: ஆதிசைவோ த்விதீயக: 11
த்ரி தீயஸ்து மஹாதேவ: சதுர்தாச்சாநுசைவக: 1
பஞ்சமோவாந்சுரசைவ; ஷஷ்ட: ப்ரவர உச்யதே 1

ஸப்தமச்சாந்த்ய சைவச்ச சைவாநாம் பேதமோரித: 1
அனுதி சைவஸ்ஸசிவ: ஆதிசைவ சிவத்விஜ: 1
விப்தச்சைவ மஹாசைவ: க்ஷத்ரியோ வைசிய ஏவ ச 1
அனுசைவஸ்ஸமாப்யாத: சூத்ரச்தாவாந்தரஸ் மருத: 1
ஸவர்ணம்பஷமத்யாஸ்து குலால: ப்ரவர ஸ்ததா 1
பாரசைவாஸ்ஸமாவ்யாதா: ப்ரோச்யதே ஸகலம் மயா 11
அந்யாஸாமேவ ஜாதீநாம் அந்த்ய சைவத்வமுச் யதே 11''

1. அனுதிசைவர், 2. ஆதிசைவர், 3. மஹாசைவர், 4. அனு சைவர், 5. அவாந்திரசைவர், 6. பிரவரசைவர், 7. அந்த்திய சைவர் ஆகியோர் ஏழுவித சைவர். இவர்களில்,

அனுதிசைவர் சிவபெருமான். ஆதிசைவர் சிவாசாரியர். மஹாசைவர் மஹாப்ராம்மணர். அனுசைவர் க்ஷத்திரியனும் வைசியரும்; அவாந்திர சைவர் சூத்திரர்; பிரவரசைவர் என்பவர் கலப்பால்பிறந்தவர், அந்த்தியசைவர்என்பவர் மேற்கூறப்பட்டவர் அல்லாத ஏனையோர். சைவத்தை ஏழுவிதமாகப் பிரித்து, யார் யார் எவ்வகைச் சைவர் என்பதும் கூறப்பட்டுள்ளது.

நான்காம் வர்ணத்தவராகிய சூத்திரற்கும் சிவதீட்சையினுல் இருபிறப்பாளாராகும் தன்மையுண்டு. தீட்சைசெய்து கொண்ட வருக்கு, முன்உள்ள பெயர் கிடையாது.

அந்தத் தீட்சைதான் எத்தனை விதம்? பொதுவாக ஏழு வகைப் படும்.

1. நயன தீக்ஷை, 2. பரிச தீக்ஷை, 3. வாசிக தீக்ஷை, 4. பாவனு தீக்ஷை, 5. சாஸ்திர தீக்ஷை, 6. யோக தீக்ஷை, 7. ஔத்திரி தீக்ஷை என்பன அவை.

1. நயன தீக்ஷை :

ஆசாரியன் சிவோகம் பாவனை செய்துகொண்டு தன்னுடைய கண்களைச் சிறிது திறந்து மாந்திரீகனுயிருக்கிறவன், கருட பாவனையினுல் சர்ப்பத்தால் தீண்டப்பட்டவனை விஷம் நீங்கு மாறு பார்ப்பதுபோல் சிஷ்யனைச் சிவபாவனையினுல் பார்த்துப் பாசநீக்கம் செய்வதாகும்.

2. பரிச தீக்ஷை :

குரு தன்னுடைய வலக் கரத்தைச் சிவனுடைய கரமாகப் பாவித்து, அவ்வாறே அர்ச்சித்துப் பின்னர் சிஷ்யனுடைய சிரம் முதலாக எல்லா அங்கங்களையும் அந்தக் கையால் பரிசிப்பதாகும்.

3. வாசிக தீக்ஷை :

ஆசாரியன் சிவபாவனை (சிவோஹம்) செய்துகொண்டு சிஷ்யனைச் சிவனுடைய திருநாமங்களை ஜபிக்கும் படிக்கும், மனனம் பண்ணும் படிக்கும் செய்வதாகும். எதுபோல என்றால் ஸ்ரீ மாணிக்கவாசகர் சிவபெருமானுடைய திருநாமங்களைச் சொல்லிக் கொடுத்து இராஜகுமாரத்தியின் ஊமையைப்போக்கு வித்தல் போல் ஆகும்.

4. பாவனு தீக்ஷை :

ஆமையானது தன்னுடைய முட்டையை நினைத்துப் பிள்ளையை வெளிப்படுத்துவது போல, குரு தன்னுடைய சிவோகம் பாவனை யாகிற மனோவியாபாரத்தால் சிஷ்யனை நினைத்துப் பாச நீக்கம் செய்வதாகும்.

5. சாஸ்திர தீக்ஷை :

சைவ சாஸ்திரங்களைப் பிழையற, சிஷ்யனுக்குச் சொல்லி வைப்பதாகும்.

6. யோக தீக்ஷை :

குரு, நால் இதழ்த்தாமரையான மூலாதாரம் ஆறு இதழ்த் தாமரையான சுவாதிஷ்டானம், பத்து இதழ்த் தாமரையான மணி பூரகம், பன்னிரண்டு இதழ்த்தாமரையான அநாகதம், பதினறு இதழ்த்தாமரையான விசுத்தி, இரண்டு இதழ்த்தாமரையான ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும் சிஷ்யனுக்கு வர்ணனு குணமாகத் தரிசிப்பித்தலாகும்.

7. ஔத்திரி தீக்ஷை :

குண்டமண்டல வேசிகைகளுடன் கூடியதாகும். இந்த ஔத்திரி தீக்ஷையானது சற்குருவினல் கலா சோதனையுடன் செய்யப்பட்டு, சஞ்சிதவினைகளை எல்லாம் போக்கும். சௌபாக்கியத்தைக் கொடுக்கும். அணிமா முதலிய எட்டுச் சித்திகளையும்தரும். உலகத் தில்உள்ள புண்ணியங்களுக்கு எல்லாம் மேலானது. கடைசியில் மோக்ஷத்தையும் கொடுக்கும். இவ்வாறு இதன் பெருமை காமிகாக மத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. முன் சொன்ன நயனாதி ஆறு தீக்ஷைகளும் ஔத்திரிதீக்ஷைக்கு அங்கமாய் அதனுள் அடங்கும். ஆகையினல் ஔத்திரி தீக்ஷையே மேலானது.

மேலும் தீக்ஷா விசேஷங்களை நோக்குங்கால், தீக்ஷை பௌதிகதீக்ஷை என்றும், நைஷ்டிகீ தீக்ஷை என்றும் இருவிதமாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அவற்றுள் முதலாவதான பௌதிக தீக்ஷை லோக தர்ம்மினி என்றும் நைஷ்டிகீ என்பது அலௌகிகீ என்றும் கூறுவதுஉண்டு. இதற்கே சிவதர்மினி என்றும் சொல்வது உண்டு. முன் சொன்ன பௌதிகி தீக்ஷையானது சமயாதி யநுஷ்டான வல்லமையுள்ளவர் விஷயத்தில் ஸபிஜை ஸாபேக்ஷை என்றும், நைஷ்டிகீ சமயானுஷ்டான வல்லமை இல்லாத பாலாதி விஷயத்தில் நிர்பிஜை, நிரபேக்ஷ என்றும் கூறுவது உண்டு. பொது வாக தீக்ஷை என்ற சொல்லிற்கே, தீ என்பது தாளம், க்ஷி என்பது க்ஷயம். புத்தி முக்தி தாளமும், பாசக்ஷயமுந் செய்வதால் தீக்ஷை எனப்படும்.

ஆச்ரம பேதத்தினுல் தீக்ஷா பேதம் உண்டு என்றும் கூறப் படுகிறது.

சிகாச்சேதம் இல்லாத தீக்ஷை லோக தர்மினி என்றும் ஞான ரத்னவளியில் கூறப்பட்டது.

"சிகாச்சேதோ ந யத்ராஸ்தி தீக்ஷா ஸாலோகதர்மினி,
சிகாகண்டந ஸம்யுக்தா தீக்ஷா ஸா சிவகர்மினி"

என்று கூறப்பட்டுள்ளது.

ஆகமாந்தரத்திலும், சிகாச்சேதம் உடையது சிவதர்மினி என்றும், சிகாச்சேதம் இல்லாதது லோக தர்மினி என்றும் கூறப் படுகிறது.

"தீக்ஷயா லோகதர்மின்யா க்ரஹஸ்தான் தீக்ஷயேத்குரு:।
ததா வை சிவதர்மின்யா தீக்ஷயேச்ச தபோதனன்॥
சிகாச்சேதஸமாயுக்தா தீக்ஷா ஸா சிவதர்மினி
சிகாச்சேதம் விஞ யத்ர க்ஞேயா ஸா லோகதர்மினி"

என்று ஆகமாந்தரத்தில் கூறப்பட்டுள்ளதை நாம் இங்குக் காண முடிகிறது. பிறகு இந்த தீக்ஷையானது நிராதாரை என்றும் ஸாதாரை என்றும் இருவகையாகும். அவற்றுள் விஞ்ஞான கலர் ப்ரளயாகலருக்கு சாக்ஷாத் பரமசிவனே நேரில் தாமே செய்யும் தீக்ஷையானது நிராதாரையாகும். ஆதாரம், அதிஷ்டாநம் ஸகல ஆன்மாக்களுக்கும் குருமூர்த்தியை அதிஷ்டித்துப் பரமசிவன் செய்யும் தீக்ஷை ஸாதாரை என்பதாகும்.

சிவன் இன்றி மற்றொருவர் பாசமோசநம் செய்ய மாட்டா ராதலால் சகலருக்கும் பரமசிவனே குருமூர்த்தியை அதிஷ்டித்து தீக்ஷை செய்கிறார் என்பது இதிலிருந்து நமக்கு வெளிப்படுகிறது. மேலும் இந்த தீக்ஷா சம்ஸ்காரமானது ஆன்மாவிற்குச் சிவத்வ முண்டாகும் நிமித்தம் சுத்தி செய்யும் சம்ஸ்காரமாகும். இந்த தீக்ஷையானது தீக்ஷை பெற்ற நான்கு வர்ணத்தார்களுக்கும் மிகுந்த உயர்வைக் கொடுக்கிறது. இதைப்பற்றி சைவபுராணத்தின்,

"கதம் சூத்ரஸ்ய சூத்ரத்தம் த்விஜத்வம் ப்ராமணஸ்ய ச।
சிஸம்ஸ்கார ஸம்பந்தாத் ஜாதிபேதோ ந வித்யதே।
சிவ தீக்ஷாதி ஜாதஸ்ய பூர்வஜாதிம் ந சிந்தயேத்।
ஸம்ப்ரதிஷ்டிதலிங்கேஸ்து ந யயா பூர்வ்பாவனு॥"

என்ற வாக்கியங்களிலிருந்து சிவசம்ஸ்காரத்தினால் ஜாதி பேதம் கிடையாது என்றும், சிவதீக்ஷை அடைந்த வர்ணத்தாருக்கு முன்பு உள்ள வர்ணபேதம் கிடையாது என்றும், அது எதுபோல என்றால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டலிங்கத்தில் இதற்குமுன் உள்ள அதனுடைய சிலாதி பாவம் எப்படி நீங்குமோ அது போல என்றும் உதாரணத்துடன் கூறுகிறார்.

இதனால் தீக்ஷை செய்துகொண்ட நான்காம் வர்ணத்தினருக்கு முன்புள்ள வர்ணமானது விலகிவிடும் என்று ஸ்ரீ மந்மதஸ்கந்தமும் கூறுகிறது.

"சிவவச்சி வ பக்தஸ்து த்ருஷ்டவ்யச் சிவகாங்காக்ஷிபி:।
ஸம்ஸ்க்ருதாச்ச சினவர் மந்தினரர் குருணமந்தச மூர்த்தினு॥
வாகிஸ்ணர்ப ஸம்பூதா: ஸர்வே ப்ராப்தாவரா நரா:।
யதோக்தா சிவஸம்ஸ்கார பவித்ரி க்ருதமூர்த்ய:॥
ஸர்வே ஸமான தர்மாச்ச ததாப்யேவம் விதீயதே।"

என்று கூறப்பட்டதிலிருந்து சிவனைப்போலச் சிவபக்தர்களும்பார்க்கத்தகுந்தவர்கள். மந்திரவடிவான குருவானவர் சிவமந்திரங்களால் சம்ஸ்காரம் செய்வதால், சிவசம்ஸ்காரத்தினால் பரிசுத்தமான சரீரத்தை அடைகிறார்கள் என்பது சைவத்தின் கோட்பாடு ஆகும்.

"இன்தனம் வஹ்னி ஸம்யோகாத் வ்ருக்ஷநாம ந வித்யதே।
கதம் சூத்தரஸ்ய சூத்ரத்வம் த்விஜத்வம் ப்ரமணஸ்ய ச।
சிவஸம்ஸ்காரஸம்பந்தாத் ஜாதிபேதோ ந வித்யதே॥"

என்று சுலோகத்தில் கூறப்பட்டபடி, எப்படிவிறகானது அக்னியின் சேர்க்கையினால் வ்ருக்ஷம் (மரம்) என்று பெயர் இல்லையோ, அதே போல் சிவ சம்ஸ்காரசம்பந்தத்தினால் ஜாதி பேதமானது தெரியாது.

மேலும் சிவதீக்ஷை செய்து கொண்ட பிறகு முன் உள்ள பெயர் நீங்கி வேறு பெயர் வந்து விடும். நான்கு வர்ணத்தாருக்கும் பெயரின் முறையை சாராவளியில் நன்கு கூறுகிருர்.

சமய தீக்ஷை செய்யும் பொழுது, குருவானவர், சிஷ்யனுடைய இரண்டு கண்களையும், ஒரு வெண்பட்டினுல் நேத்திர மந்திரத்தினுல் கட்டி, சிஷ்யனுடைய கைகளில் புஷ்பத்தைக் கொடுத்து அஞ்சலி ஹஸ்தத்தோடு, பிடித்து அழைத்துக்கொண்டு தீக்ஷாமண்டபத்தை வலமாக வந்து சிவனிடத்தில் சமர்ப்பிக்கச் செய்வார். (காமி கவசப்படி புஷ்பசமர்ப்பணம் ஆனபிறகு நேத்திர பந்தம் விட வேண்டும்.) அப்படி சமர்ப்பணம் செய்யப்பட்ட புஷ்பம் எந்த இடத்தில் விழுந்ததோ அந்த முகத்தினுடைய நாமதேயத்தை வைக்கவேண்டும். உதாரணமாக ஈசானக்ருகத்தில் விழுந்தால் முதல் வர்ணத்தாருக்கு ஈச்சிவம் என்றும், இரண்டாம் வர்ணத் தாருக்கு ஈசதேவன் என்றும், மூன்ரும் நான்காம் வர்ணத்தாருக்கு ஈசகஎன் என்றும் நாமகரணம் செய்யவேண்டும் என்று கூறுகிறது. மேலும் ஸ்கந்த காலோத்திரத்தில்,

“ ஜாத்யுத்தரண ஹோமம் து ஏனககம் து சதம் சதம்l
தஹேத்வை சூத்ர ஜாதிம் து அனலேனது ஷண்முக:ll
ஸச்சுத்ரத்வம் யோஜயித்வா கிரியசம் வை ஷோதசீம் குரு:l
ஸாக்ஷாத்விப்ரத்வமாபன்னே பக்ஷாத் தீக்ஷாம் குருஷ்வ சl
த்ரைவர்ணிகாதாமேவந்து காரயேத்விதிநா புத:ll ”

என்று கூறப்பட்டு இருப்பதால் பதினுறு கிரியைகளினுல் நான்காம் வருணத்தாருக்கு அத்தன்மையைப் போக்க ஹோமங்கள் செய்து சற்சூத்திரம் என்ற தன்மையை அடைந்ததாக எண்ணி, பிறகு சாக்ஷாத் விபரத்வம் அடைந்ததாகப் பாவித்து பிறகு தீக்ஷை செய் விக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

பிறகு இந்த வர்ணுச்சிரம சந்திரிகையில், தீக்ஷைப்பெற்று சிவபூஜையில் ஈடுபட்டு உள்ளவர்களுடைய நான்கு வர்ணத்தவர் களுடைய மாஹாத்மயம் கூறப்படுகிறது.

அசிந்தியவிச்வம் என்ற நூலில் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்.

“ ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் சிவபூஜனம்l
லிங்காதிபூஜனம் சுத்ர ஸ்தாவரந் நாந்திகேஸ்வரll
லிங்கிநாம்பூஜனம் தத்ர ஜங்கமாராதனம் பவேத்l
பூஜாகாலேஷீ ஸாந்நித்தயம் ஸ்தாவரே சிவதேஜஸீl
ஜங்கமே ஸர்வகாலம ச ஸான்நித்யம் குருதே சிவ:ll
ஜங்கமஸ்தாவமானேன ஸ்தாவரம் நிஷ்பலம் பவேத்ll ”

இதன் தாத்பரியம் :

சிவபூஜை இரண்டு வகைப்படும் தாவர ஜங்கமம் என்று. லிங்க பூஜை தாவரமாகும். சிவபக்தர்களுடைய பூஜை ஜங்கம ஆராதனம் என்று பெயர். ஸ்தாவர லிங்கத்தில் பூஜா காலங்களில்தான் சான்னித்யம். ஜங்கமமான சிவபக்தர்களிடத்தில் எப்பொழுதும் சான்னித்யம், ஆகையால் ஜங்கமமான சிவபக்தர்களை அவமானப் படுத்தினால் அதனால் ஸ்தாவரமான சிவலிங்க ஆராதனை நிஷ்பல மாகும் என்று கூறுகிறது. ஆகையினால் சிவாராதனம், எல்லோ ராலும், எப்பொழுதும் அவசியம் செய்யவேண்டும் என்பதை நமக்கு நன்கு உணர்த்துகிறது. ஆதித்தியபுராணத்தில் கூறும்பொழுது ப்ராணனைக் காட்டிலும் சிவபக்தர்கள்மிகவும் உயர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது,

" இதி ஜானோஹி மத்பக்தான் ப்ராணேப்யோ அபிகரியஸ:''

என்று.

இவ்வாறு நான்கு வர்ணத்தாருக்கும் சிவதீக்ஷயில் அதிகாரம், அதன் மஹிமை,சிவதீட்சை கொண்டவர்களின் பூஜையின் மஹிமை, சிவபக்தர்களின் உயர்வு. இவைகளைக்கூறிய பிறகு அவரவர்களுக்கு (அந்த நான்கு வர்ணத்தாருக்கும்) (நான்கு ஆச்சிரமிகளுக்கும்) உரிய சௌசம்முதலான நித்ய கர்மானுஷ்ட்டானங்களைக் கூறுகிறார்.

தீட்சை செய்து கொண்ட பிறகு அனுஷ்டிக்க வேண்டிய சௌசம், ஆசமநம் முதலானவைகள் நான்கு வர்ணத்தார்க்கும் சமமாக இருந்த போதிலும், சிற்சில பேதங்கள் காணப்படுகின்றன என்பதைக் கூறுகிறார். ஆச்ரமத்தினால் பேதங்கள் தெரிகின்றன.

இவ்விஷயம் காரணகமத்தில் நன்கு கூறப்படுகிறது.

" ஏதத் சோசம் க்ரஹஸ்தானம் த்விகுணம் ப்ரும்மசாரிணாம்l
க்ரஹஸ்யாத்ரிகுணம் பிக்ஷோ: யதிநாம் துசதுர்குணம்ll ''

க்ரஹஸ்தனைக் காட்டிலும் இரண்டு மடங்கு ப்ரும்மசாரிகளுக் கும் மூன்று மடங்கு வானப்ரஸதனுக்கும், நான்கு மடங்கு சந்நியாசி களுக்கும் சௌசம், தந்ததாவனம் முதலியன விதிக்கப்பட்டுள்ளன. ஸ்நானவிதி கூறும்பொழுது காமிகாகமத்தில் இருந்து மேற்கோள் காட்டுகிறார்.

" ஜலஸ்நானப் புரா க்ருதவா ப்ராதராஸாயமப்யஸேத்l
ஸந்த்யாந்த ரேஷ்வதாக்னேயம் கேவலம் வாஸவாருணம்ll
ஆக்நேயம் வாருணஸ்நானத் அஸம்ரவ்யேய குணதிகம்l
தஸ்மாத் வாருணமுத்ஸிஜ்ய ஸ்நானமாக்னேயமாசரேத்ll "

ஸ்நானத்தில் வாருணஸ்நானம் பஸ்மஸ்நானம் என்று இரு வகைப்படும். வாருண ஸ்நானத்தைக் காட்டிலும் பஸ்மஸ்நானம் உயர்ந்தது என்று கூறப்படுகிறது. அதிலும் சந்நியாசிகளுக்கு மிகவும் அவசியம் விபூதிஸ்நானம், மேலும் யதிகளுக்கு விபூதியை உத்தூல பூர்வகம், த்ரிபுண்ட்ரதாரணம் கூறப்படுகிறது. அது போல் நைஷ்டிகளுக்கும் கூறப்படுகிறது. ஆச்ரம பேதத்தினால் சந்தியாகால உபாசன வேதமும் காணப்படுகிறது. நியாசபேதமும் கூறப்படுகிறது. ஸ்ருஷ்டி ந்யாச; ஸ்திதிநியாச; ஸம்ஹாரநியாச என்று மூன்று விதிக்கப்படுகிறது. முறையே க்ரஹஸ்தனுக்கு ஸ்ருஷ்டி நியாசமும், பிரமமசாரிக்கு ஸ்திதிநியாசமும் வானப்ரஸ்தனுக்கும், சந்நியாசிக்கும் ஸம்ஹார நியாசமும் சொல்லப்படுகிறது.

இவ்விஷயம் ஸந்தான ஸம்ஹிதையில் கூறப்படுகின்றது.

" சுருஷ்டிஸ்திதிச்ச, ஸம்ஹாரத்ரிவிதோ ந்யாஸ உச்யதே।
க்ரஹஸ்யஸ்ஸ்ருஷ்டிமார்கேன ப்ரம்மசாரீ ஸ்திதிம் சரேத்।
வானப்ரஸ்தயதீனும் து ஸம்ஹாரந்யாஸ உச்யதி। "

பிறகு யக்ஞோபவித தாரணம் வர்ணாச்ரம பேதமாக விதிக்கப்பட்டுள்ளது என்றவிஷயமும் இந்நூலில் காமிக, கிரண, ஸுப்ரபேத முதலிய ஆகமப்ரமாணங்களுடன் சற்று விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆச்ரமுறையாக வஸ்திர தாரணமும் சற்றுக் கூறப்படுகிறது. நான்காம் வர்ணத்தவருள் நைட்டிக பிரமசாரியாயின் எக்காலத்திலும் பூணூல் தரிக்க உரியவன் என்று கூறுகிறது. மேலும் ஜடாதாரணம் நான்கு வர்ணத்தாருக்கும் விதிக்கப்பட்டுள்ளது. நான்காம் வர்ணத்தினரானசற்சூத்திரர் ஜடாதாரணத்திற்குரியர் என்று கூறுகிறது இந்நூல்.

சற்சூத்திரா லக்ஷணமும் நன்கு கூறுகிறது. சாதிக்கலப்பில்லாதவரும், சுத்தராகவும், மதுமாம்சாதிகள் இல்லாதவரும்தான் சற்சூத்திரர் ஆவார். இவர் சைவாசாரங்கட்குரியவராவார்.

போஜனாதி விஷயங்களையும், எந்தவருணத்தினர் வீட்டில் சாப்பிடலாம் என்பதையும் கூறுகின்றது வர்ணாச்சிரம சந்திரிகை.

பிறகு சகலதருமத்திற்கும் சாரபூதமான சிவார்ச்சனரும் நான்கு வர்ணத்தாரும் உரியர் என நன்கு சொல்லப்படுகின்றது. அவ்விஷயங்கள் ஆகமங்களில் விஸ்தாரமாகக்கூறப்பட்டதை இந்நூல் சிற்சில ஆகமங்களிலிருந்து சான்றாக எடுத்துரைக்கிறது.

(தொடரும்)

பண்டார சாத்திரங்கள் :

"வர்ணாச்சரம சந்திரிகா"

திரு. V. கணேசன்

(மலர் 47, இதழ் 11, பக்கம் 616 இன் தொடர்ச்சி.)

நான்கு வர்ணத்தாரும் சிவதீக்ஷைசெய்து கொண்டாலும் ஆத்மார்த்த பூஜையில்தான் அதிகாரம், பரார்த்த பூஜையில் ஆதிசைவனைத்தவிர ஏனையோருக்கு அதிகாரம் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். இவ்விஷயம் மகுடம் என்ற ஆகமத்தில் கூறி உள்ளதை இந்நூல் கூறுகிறது.

" விப்ரக்ஷத்ரிய விட்சுத்ரா: தீக்ஷிதாஞ்ச ப்ரவேசகா:।
ஆத்மார்த்தயஜனம் குர்யு: ந குர்யஸ்து ப்ரார்த்தகம்। "

என்றும், ஸுப்ரபேத ஆகமத்தில்,

" திக்ஷிதானாம் த்விஜாதீனாம் ஆத்மார்த்த மனு லோமினாம்।
பரார்த்தமாதிசைவானாம் ஆத்மார்த்தஸஹிதம் பவேத்॥ "

என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் ரௌரவாகமம்,

" ஆதிசைவேன கர்த்தவ்யம் ஆத்மார்த்தம் ச பரார்த்தகம் "

என ஆதிசைவனால்தான் ஆத்மார்த்தமும், பரார்த்தமும் செய்யத்தகுந்தது என்கிறது. மேலும் ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் லிங்க பேத முறையை நன்கு இந்நூல் கூறுகிறது. ஸ்திரீகளுக்குக் கூட சிவார்ச்சனாப்ரகாரம் கூறப்பட்டுள்ளது. வித்யாசார சம்ஹிதையில்,

" ஸ்த்ரீணாம்து பார்திவம் ஸபர்த்ரீணாம் விசேஷத:। "

என்ற வாக்கியத்திலிருந்து இதனை நாம் அறியமுடிகிறது. மேலும் எந்த எந்த வர்ணத்தவர்கள் எப்படி அனுஷ்டானம் செய்ய வேண்டும் என்பதில்,

" க்ஷத்ரியச்சைவ வைசியச்ச தத்வதேவ ஸமாசரேத்।
கேவல் சூத்திரஜாதிஸ்து ஆகமோக்தம் ஸமாசரேத் "
இதரேஷாம் ச சைவானாம் தூஷ்ணீமாசார உச்யதே॥ "

ஐப்பசி மாதச் சிறப்பு நாட்கள்

17—10—88 திங்கள், துலாவிஷுபுண்யகாலம். துலாவிஷு தீர்த்தம். துலாரவி 10.46. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு அபிஷேகம். சீகாழியில் உமாமகேசுவரருக்கு உச்சிக் காலத்தில் புழுகாப்பு. துலாஸ்நான ஆரம்பம். தருமையில் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகா சதசண்டி யக்ஞசாலையில் காலை நவபத்திரிகா கிரஹணம்.

18—10—88 செவ்வாய், காலை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞ சாலையில் அஷ்டாதச ஆயுதமண்டலபூஜை.

19—10—88 புதன், மஹாநவமி. சரஸ்வதிபூஜை. ஆயுதபூஜை, மஹா பூர்ணாகுதி. ஸ்ரீ அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி.

20—10—88 வியாழன், விஜயதசமி. தருமை ஸ்ரீ மஹாலக்ஷ்மிதுர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞ கலசாபிஷேகம். விசேஷபூஜை.

22—10—88 சனி, பிரதோஷம். கோ துவாதசி.

24—10—88 திங்கள், பௌர்ணமி விரத பூஜை. அன்னாபிஷேகம். தருமை 7 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள், 9 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் குருபூஜைகள்.

25—10—88 செவ்வாய், ஸ்ரீ திருமூல நாயனார் குருபூஜை.

26—10—88 புதன், ஸ்ரீ நெடுமாற நாயனார் குருபூஜை.

27—10—88 வியாழன், கிருத்திகை விரதம். வேளூர்க்கிருத்திகை. தருமை ஸ்ரீசண்முகர் அபிஷேகம். ஸ்ரீஇடங்கழி நாயனார் குருபூஜை.

28—10—88 வெள்ளி, சங்கடஹர சதுர்த்தி. தருமை 22 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் குருபூஜை.

1—11—88 செவ்வாய், காளாஷ்டமி. தருமை 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. ஸ்ரீ சத்தி

2—11—88 புதன், ஆயில்ய விழா. [நாயனார் குருபூஜை.

3--11—88 வியாழன், தருமை ஆதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருபூஜை.

4—11—88 வெள்ளி, திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்த

7—11—88 நாக சதுர்தசி. ஸ்நானம். தீபாவளி. [நாள்.

8—11—88 செவ்வாய், கிரு - அஸ் - சசி. தீபாவளிப் பண்டிகை. ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை. பெண்ணாகடத்தில் ஸ்ரீ மெய்கண்டதேவருக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

9—11—88 புதன், தீபாவளி, அமாவாசை, கேதார கௌரி விரதம். லட்சுமி குபேர பூஜை.

10—11—88 வியாழன், ஸ்கந்தசஷ்டி உற்சவ ஆரம்பம்.

11—11—88 வெள்ளி, பூசலார் நாயனார் குருபூஜை.

13—11—88 ஞாயிறு, ஐயடிகள்காடவர்கோன் நாயனார் குருபூஜை.

15—11—88 செவ்வாய், கந்தசஷ்டிவிரதம், சிரவண விரதம். கடைமுகம் சூரசம்காரம், கடைமுகம் தீர்த்தம்.

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல் - 3

1.	சித்தாந்த சைவ வினாவிடை	ரூ. 8—00
2.	விநாயகர் அகவல்	1—50
3.	சிவப்பிரகாசக் கட்டளை	0—70
4.	அனைத்துலக சைவ சித்தாந்த முதல் மாநாட்டு மலர்	12—00
5.	திருவருட்செய்தி 2 ஆம் பாகம்	7—50
6.	சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்	15—00
7.	திருத்தொண்டர் திருவந்தாதி	3—00
8.	தமிழ் வளர்க்கும் தருமபுரம்	5—00
9.	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம்	3—00
10.	மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை	1—00
11.	கடம்பவனபுராணம்	10—00
12.	தேவி மகாத்மியச் சுருக்கம்	0—75
13.	அபிராமி அந்தாதி ஆராய்ச்சி நூல்	10—00
14.	அபிராமி அம்மைப் பதிகம்	0—30
15.	திருவெழுகூற்றிருக்கை	0—50
16.	புவனாம்பிகை கலைக்ஞானதீபம்	1—25
17.	சிவபூஜாதீபம்	0—80
18.	சிதம்பரம் திருப்பதிகங்களும் ஸ்ரீ சபாநாயகர் ஸ்ரீ சிவகாமி அம்மை தோத்திரங்களும்	4—50
19.	திருவிடைக்கழி தலச்சிறப்பு	1—20
20.	திருநள்ளாறும் சனிபகவானும்	0—45
21.	தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை	1—00
22.	மூவலூர் தேவாரம் - தலச்சிறப்பு	0—75

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம் - மயிலாடுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press. Dharmapuram, Mayiladuthurai 10-10-88.